<u>விருதுநகர் நகராட்சி</u>

<u>2018––2019 ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கை அமைப்பும், நிர்வாகமும்</u>

<u>நிர்வாக எல்லை</u>

விருதுநகர் நகராட்சி மன்றம் 13–03–1915 ம் ஆண்டு அரசாணை எண்.108 உத்திரவுப்படி மூன்றாம் நிலை நகராட்சியாக அமைக்கப்பட்டது. .18–10–1956 ம் தேதிய அரசாணை எண்.1514ன்படி முதல்நிலை நகராட்சியாகவும் பின்னர் அரசின் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறையின் 22–05–98 ம் தேதிய 85ன் ஆணைப்படி 22–05–98 முதல் தேர்வுநிலை நகராட்சியாக உயர்வு செய்யப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

விருதுபட்டி கோட்டைப்பட்டி, சின்னமூப்பன்பட்டி, அல்லம்பட்டி, முத்துராமன்பட்டி ஆகிய ஐந்து வருவாய் கிராமங்கள் உள்ளடங்கிய வருவாய் கிராமங்கள் முழுவதும் நகராட்சி எல்லைக்குட்பட்டதாகும்.

இந்நகரின் மொத்தப் பரப்பளவு 6.60 சதுர கிலோ மீட்டராகும். 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகரின் மக்கள் தொகை 73003 ஆகும். 2011 ம் ஆண்டின் மக்கள் தொகை 72144.

<u>நிர்வாகம்</u>

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (தேர்தல்) துறையில் 26–06–96 ம் தேதிய 189 எண் அரசாணைப்படி இந்நகர் பகுதி 36 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அரசாணை எண்.145, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை, நாள்.24.10.2016ன் படி தற்போதைய நாள் வரை தனிஅலுவலர் மூலம் இந்நகர்மன்றம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

<u>ஆணையாளர்</u>

அறிக்கையாண்டில் பணிபுரிந்த ஆணையாளர்களின் பெயர் மற்றும் பணிபுரிந்த ஆண்டு விபரம் ஆகியவை கீழ்க்கண்டவாறு.

01–4–2018முதல் 30–9–2018 வரை – திரு.பி.வி.சந்திரசேகர்
ஆணையாளர்

08–10–2018 முதல் 30–01–2019 – திரு.கே.அச்சையா
ஆணையாளர் (கூடுதல் பொறுப்பு)

30–01–2019 முதல் 31–3–2019 – திரு.எஸ்.பார்த்தசாரதி
ஆணையாளர்

<u>மேலாளர்</u>

அறிக்கையாண்டில் பணிபுரிந்த மேலாளர்களின் பெயர் மற்றும் பணிபுரிந்த ஆண்டு விபரம் ஆகியவை கீழ்க்கண்டவாறு.

01–04–2018 முதல் 07–08–2018 வரை திருமதி.எஸ்.செண்பகநாச்சியார், மேலாளர்(பொ)

08–08–2018 முதல் 31–03–2019 வரை திரு.ஜெ. ரவி, மேலாளர்

**வருவாய் அலுவலர்**

அறிக்கையாண்டில் பணிபுரிந்த வருவாய் அலுவலர்களின் பெயர் மற்றும் பணிபுரிந்த ஆண்டு விபரம் ஆகியவை கீழ்க்கண்டவாறு.

01–04–2018 முதல் 31–3–2019 வரை திரு . எஸ். சங்கர் கணேஸ், வருவாய் அலுவலர்

**கணக்காளர்**

அறிக்கையாண்டில் பணிபுரிந்த கணக்கர்களின் பெயர் மற்றும் பணிபுரிந்த ஆண்டு விபரம் ஆகியவை கீழ்க்கண்டவாறு.

01–04–2018 முதல் 31–3–2019 வரை திருமதி.எஸ். செண்பகநாச்சியார், கணக்கர்

**நிர்வாகச் செலவு**

சென்ற ஆண்டில் பொதுப்பிரிவு மற்றும் இதர பிரிவு பணியாளர்களுக்கான ஊதியம் ரூ.136254641/– செலவிடப்பட்டது. குடிநீர்பிரிவு பணியாளர்களுக்கு ரூ.25310454/– செலவிடப்பட்டது.

நிர்வாகப் பணியாளர்களுக்கென பயணப்படியாக சென்ற ஆண்டில் ரூ.4320/– அறிக்கையாண்டில் ரூ.80847 /– ம் செலவிடப்பட்டது.

அறிக்கையாண்டில் அலுவலர்கள் நியமனம் மற்றும் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட நடைமுறைகள் முறையாக கடைப்பிடிக்கப்பட்டன.

**வழக்குகள்**

அறிக்கையாண்டு ஆரம்பத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள், தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் ஆகிய விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1) | 31–03–2017 அன்று முடிவு செய்யப்படாமல் பாக்கியுள்ள வழக்குகளின் எண்ணிக்கை | .. | 62 |
| 2) | 2018–2019 ம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் எண்ணிக்கை | .. | 32 |
| 3) | 31–03–2019 ம் தேதி நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை | .. | 94 |
| 5) | நிலுவையில் உள்ள வழக்குகளின் மூலம் வர வேண்டிய வருமானம் | .. | 366.92லட்சம் |

**பணியமைப்பு பொறியாளர் பிரிவு**

பொறியாளர்

| | | | | |
|---|---|---|---|---|
| 1)திரு. எஸ். கோவிந்தராஜன் | .. | 01–04–2018 | – | 19–11–2018 |
| 2)திரு.பி. குருசாமி | .. | 20–11–2018 | – | 31–03–2019 |

உதவி பொறியாளர்/இளநிலை பொறியாளர்

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | திரு த.பாலாஜி,உதவி பொறியாளர் .. | 01–04–2018 | – | 31–3–2019 |

**வரைவாளர்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | திரு டி.பாஸ்கர் .. | 1–4–2018 | – | 31–3–2019 |

| வஎண் | சாலை விபரம் | 31.03.2018 கி.மீ. | 31.03.2019 கி.மீ. |
|---|---|---|---|
| 1 | சிமண்ட் சாலை | 15.110 | 15.110 |
| 2 | தார்ச்சாலை | 29.810 | 29.528 |
| 3 | பேவர்பிளாக் சாலை | 39.423 | 39.705 |
| 4 | கருங்கல்சாலை | 1.100 | 1.100 |
| 5 | மண்சாலை | 12.677 | 12.677 |
| | **மொத்தம்** | **98.120** | **98.120** |

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் |
|---|---|---|
| | **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம்** | |
| 1 | வார்டு எண்.36ல் 4 எண்ணம் கொண்ட 90 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைத்தல் | 1.80 |
| 2 | வார்டு எண்.36ல் 2 எண்ணம் கொண்ட 90 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைத்தல் | 0.53 |
| 3 | வார்டு எண்.17ல் 2 எண்ணம் கொண்ட 36 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைத்தல் | 0.47 |
| 4 | வார்டு எண்.15ல் 9 எண்ணம் கொண்ட 90 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைத்தல் | 1.50 |
| 5 | வார்டு எண்.26ல் 6 எண்ணம் கொண்ட 90 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைத்தல் | 1.00 |
| 6 | வார்டு எண்.6ல் 3 எண்ணம் கொண்ட 90 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைத்தல் | 0.50 |
| 7 | வார்டு எண்.25ல் 2 எண்ணம் கொண்ட 90 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைத்தல் | 0.33 |
| 8 | வார்டு எண் 17ல் ஏற்கனவே உள்ள கைபம்பை கழற்றி அவ்விடத்தில் பைப்லைன் அமைத்து மினி பவர் பம்ப் மற்றும் பிவிசி வாட்டர் டேங்க் அமைக்கும் பணி | 1.50 |
| 9 | வார்டு எண் 36ல் ஏற்கனவே உள்ள ஸ்டோக் பம்பை கழற்றி அவ்விடத்தில் பைப்லைன் அமைத்து மினி பவர் பம்ப் மற்றும் பிவிசி வாட்டர் டேங்க் அமைக்கும் பணி | 1.50 |
| 10 | வார்டு எண் 6ல் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் மோட்டார் பொருத்தும் பணி | 3.30 |
| | **பாரளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம்** | |
| 1 | வார்டு எண்.3ல் 1 எண்ணம் கொண்ட 150 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்கு அமைத்தல் | 0.21 |
| 2 | வார்டு எண்.4ல் 1 எண்ணம் கொண்ட 150 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்கு அமைத்தல் | 0.21 |
| 3 | வார்டு எண்.4ல் 1 எண்ணம் கொண்ட 150 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்கு அமைத்தல் | 0.21 |
| 4 | புல்லக்கோட்டை ரோட்டில் 1 எண்ணம் கொண்ட 150 வாட்ஸ் எல்.இ.டி. | 0.21 |

| | | |
|---|---|---|
| | தெரு விளக்கு அமைத்தல் | |
| 5 | சிவன் கோயில் முதல் டிடிகே ரோடு வரை 3 எண்ணம் கொண்ட 150 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைத்தல் | 0.63 |
| 6 | ரயில்வே பீடர் ரோட்டில் 1 எண்ணம் கொண்ட 150 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்கு அமைத்தல் | 0.21 |
| 7 | பழைய பஸ் ஸ்டாண்டில் 2 எண்ணம் கொண்ட 150 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைத்தல் | 0.42 |
| 8 | பாலா எலக்ட்ரானிக்ஸ் அருகில் 1 எண்ணம் கொண்ட 150 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்கு அமைத்தல் | 0.21 |
| 9 | அபிராமி வேறாட்டல் அருகில் 1 எண்ணம் கொண்ட 150 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்கு அமைத்தல் | 0.21 |
| 10 | இளங்கோவன் தெரு,எல்பிஎஸ் நகர்,படேல் தெரு ஆகிய இடங்களில் 15 எண்ணம் கொண்ட 150 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைத்தல் | 3.15 |
| 11 | டிகே ரோடு மற்றும் அன்னை சிவகாமிபுரம் ஆகிய இடங்களில் 18 எண்ணம் கொண்ட 150 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைத்தல் | 3.78 |
| 12 | பிள்ளையார் கோயில் தெரு முதல் டிடிகே ரோடு வரை 5 எண்ணம் கொண்ட 150 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைத்தல் | 1.05 |
| 13 | வடக்கு ரத வீதி முதல் தெற்கு ரத வீதி வரை 14 எண்ணம் கொண்ட 150 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைத்தல் | 2.94 |
| 14 | சிவன் கோயில் முதல் சிவன் கோயில் தெரு வரை 6 எண்ணம் கொண்ட 150 வாட்ஸ் எல்.இ.டி. மினி வைற மாஸ் தெரு விளக்குகள் அமைத்தல் | 3.50 |
| 15 | மெயின் தெரு 4வது மற்றும் 8வது தெரு மற்றும் மொன்னி தெரு ஆகிய இடங்களில் 5 எண்ணம் கொண்ட 150 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைத்தல் | 1.05 |
| 16 | மெயின் தெரு மற்றும் குறுக்கு தெரு ஆகிய இடங்களில் 5 எண்ணம் கொண்ட 150 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைத்தல் | 1.05 |
| 17 | சீதக்காதி தெரு, பாரப்பட்டி தெரு மற்றும் கல்பள்ளிவாசல் தெரு ஆகிய இடங்களில் 4 எண்ணம் கொண்ட 150 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைத்தல் | 0.84 |
| 18 | மெயின் தெரு 1,2,3 மற்றும் செந்தில்குமார் மீனாம்மாள் தெரு ஆகிய இடங்களில் 4 எண்ணம் கொண்ட 150 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைத்தல் | 0.84 |
| 19 | பெரிய பள்ளிவாசல் தெரு,சிதம்பரனார் தெரு மற்றும் அப்துல்லா தெரு ஆகிய இடங்களில் 4 எண்ணம் கொண்ட 150 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைத்தல் | 0.84 |
| 20 | டிசிகே பெரிய சாமி நாடார் தெரு, விவிவி அந்நியன் தெரு,எம்கே அய்யன் தெரு மற்றும் சின்னைய்யா பள்ளி தெரு ஆகிய இடங்களில் 4 எண்ணம் கொண்ட 150 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைத்தல் | 0.84 |
| 21 | அலி தெரு,சின்னபள்ளிவாசல் தெரு மற்றும் செந்நில்குமார் மீனாம்மாள் தெரு ஆகிய இடங்களில் 4 எண்ணம் கொண்ட 150 வாட்ஸ் எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைத்தல் | 0.84 |
| 22 | பாவாலி ரோடு மற்றும் பர்மா காலனி நுழைலாய் வரை 6 எண்ணம் கொண்ட 150 வாட்ஸ் எல்.இ.டி. மினி வைற மாஸ் தெரு விளக்குகள் | 3.50 |

| | | |
|---|---|---|
| | அமைத்தல் | |
| | **இடைவெளி நிரப்பும் நிதி** | |
| 1 | நகராட்சி அலுவலக பின்புறம் கூடுதல் அலுவலக கட்டிடம் கட்டும் பணி | 200.00 |
| | **தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2018–19** | |
| 1 | பாவாலி ரோட்டில் தார்ச்சாலை அமைக்கும் பணி மற்றும் லெட்சுமி தெரு,மாலப்பேட்டை தெருக்களில் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணிகள் | 111.00 |
| | **பாதாள சாக்கடை திட்டம்** | |
| 1 | உள்குழாய் வீட்டு இணைப்புகள் வழங்கல் பணி | 650.00 |
| | **திடக்கழிவு மேலாண்மை திட்டம்** | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட 5 இடங்களில் நுண்உரம் செயலாக்க மையம் அமைக்கும் பணி | 280.60 |
| 2 | இந்நகராட்சிப் பகுதிகளில் பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்கள் கொள்முதல் செய்தல். ( 57 எண்ணங்கள் ) | 102.60 |
| | **பொதுநிதி** | |
| 1 | வடக்கு ரத வீதி மற்றும் தெற்கு ரத வீதியில் கோயில் தேர் போவதற்கு உண்டான விடுபட்ட சாலைப்பணிகள் | 2.00 |
| 2 | வார்டு எண்.15ல் உள்ள வடக்கு ரத வீதியில் சிறு பாலம் அமைக்கும் பணி | 1.40 |
| 3 | காலேஜ் ரோட்டில் உள்ள பொறியாளர் குடியிருப்பு கட்டிடத்திற்கு பழுது மற்றும் பராமரிப்பு பணி | 0.83 |
| 4 | தர்காஸ் தெருவில் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 0.71 |
| | **கல்வி நிதி** | |
| 1 | பாவாலி முஸ்லீம் நகராட்சி பள்ளியில் கூடுதல் கட்டிடம் கட்டும் பணி | 25.00 |
| 2 | டிபிஎன்எம் பெண்கள் உயர் நிலை பள்ளியில் சுற்றுச்சுவர் மற்றம் பழுது பணி | 12.70 |
| 3 | பாவாலி முஸ்லீம் பள்ளியில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் | 5.50 |

**பாதாள சாக்கடைத் திட்டம்**

விருதுநகர் நகராட்சிக்கென பணிகள் அரசானை எண் 132. நாள் 28/02/2011 ன் பிரகாரம் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தும் பொருட்டு திருத்திய நிர்வாக / ஒப்புதல் அரசாணையின்படி ரூ2785 இலட்சமும், ஆண்டு பராமரிப்பு மதிப்பீடு ரூ35.64இலட்சமும் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. மேற்கண்ட பாதாள சாக்கடை திட்டத்தில் சாக்கடை குழாய் பதிக்கும் பணிகள் இரண்டு சிப்பங்களாகவும் மற்றும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி ஒரு சிப்பமாகவும் பிரிக்கப்பட்டு பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நடைபெற்று வருகின்றன.

அரசாணையின்படி வைப்பு தொகை மற்றும் மாதாந்திர கட்டணத்தை நிர்ணயம் செய்ய உபவிதிகளை அங்கீகரிக்க இந்நகர் மன்றம் தனது தீர்மான எண்.255 நாள் 30–4–2007 மற்றும் தீர்மானம் எண்.382 நாள் 20–07–2007 ல் அனுமதி வழங்கி, நகராட்சி நிர்வாக ஆணையரக கண்காணிப்பு பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ஆணை மூ.மு.எண்.26819/07 UGSS–1, நாள் 20–10–2007 ல் உபவிதிகளுக்கு பொது

அங்கீகாரம் (General Approval) வழங்கப்பட்டு மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

கழிவுநீர் சேகரிக்கும் சிப்பம்–1 மற்றும் சிப்பம் II ல் பணிகள் முடிவுற்று சாக்கடை கழிவுநீர் தினமும் 16.00 இலட்சம் லிட்டர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

சிப்பம்–1 ல் பகுதி 1 மற்றும் 2ல் மொத்தமுள்ள 43.82 கி.மீ. சாக்கடை குழாய் பதிக்கும் பணியில் 40.08 கி.மீ.பணிகள் முழுவதும் முடிவடைந்துள்ளன மொத்தமுள்ள கழிவுநீர் சேகரிக்கும் புதைசாக்கடை வாயிற் புகைகளின் மொத்த எண்ணிக்கை 1749ல் இதில் 1641 எண்ணம் முடிவடைந்துள்ளது.

**சிப்பம்–3**_கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணிகள் முழுவதும் முடிக்கப்பெற்று மற்றும் இயந்திரங்கள் பொருத்தும் பணிகளும் முடிவுற்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னை அவர்களின் அனுமதி ஆணை எண் 22927 நாள் 16.08.2013ல் பெறப்பட்டு உள்ளது. தினமும் 16.00 இலட்சம் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு வருகிறது. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் அருகில் உள்ள கௌசிகா ஆற்றில் விடப்பட்டு வருகிறது.

விரிவான திட்ட அறிக்கையின்படி விருதுநகர் நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட பாதாளச் சாக்கடை இணைப்புகள் 12090 ஆகும். சிப்பம்1ல் 6731ம் மற்றும் சிப்பம்–2ல் 5400 அடங்கும் இவற்றில் சிப்பம்1ல் 6731ம் சிப்பம் 4747ம் ஆக மொத்தம் 11478 இணைப்புகள் முடிக்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

பாதாளச் சாக்கடை இணைப்பிற்கான காப்புத் தொகை ரூ. 301.35 இலட்சம் பொதுமக்களிடம் இருந்து வசூல் செய்யப்பட்டுள்ளது. நகராட்சி மூலமாக இத்திட்டப்பணிக்காக இது வரை தொகை ரூபாய் 2764.51 /– இலட்சம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாாியத்திற்க்கு விடுவிப்பு செய்யப்பட்டுள்ளது.

**பாதாளச் சாக்கடை திட்ட உள் குழாய் வீட்டு இணைப்புகள்**

விருதுநகர் நகராட்சியினை தூய்மையான நகரமாக மாற்றிடும் வகையில் இத்திட்டத்தினை முழுமையான பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் மேலும் பாதாளச்சாக்கடை திட்டத்தின் கீழ் பயனாளிகளால் இணைக்கப்படாத வீட்டு இணைப்புகள் 12000 எண்ணிக்கையினை பாதாளச் சாக்கடை திட்டத்தின் கீழ் இணைக்கவும், அதற்கான செலவினத் தொகை **ரூ.650.00** இலட்சத்தினை வட்டியில்லாத கடனாக தமிழ்நாடு நகர்ப்புற சேவை கட்டமைப்பு நிதி இணையம் மூலம் (TUFIDCO) பெறவும் பணிகள் முடிந்த பிறகு வீட்டு உரிமையாளரிடம் இருந்து தவணை முறையில் வசூல் செய்து கொள்ளவும், நகராட்சி நிர்வாக ஆணையாளர் சேப்பாக்கம் சென்னை அவர்களுக்கு புதிய அனுமதி வேண்டி பிரேரணை அனுமதி மேற்கண்டவாறு பாதாளச் சாக்கடை வீட்டு இணைப்புகள் பெறாத பயனாளிகளுக்கு வீட்டு இணைப்புகள் வழங்கிடவும் அதற்கான செலவினத் தொகை முதற்கட்டமாக **ரூ.650.00** இலட்சத்தினை தமிழ்நாடு நகர்ப்புற சேவை கட்டமைப்பு நிதி இணையம் மூலம் (TUFIDCO) வட்டியில்லாத கடனாக பெறவும் பணிகள் முடிந்த பிறகு வீட்டு உரிமையாளரிடம்

இருந்து தவணை முறையில் வசூல் செய்திடவும் மன்ற அனுமதி எண் 300 நாள் 09/02/2018 ல் பெறப்பட்டு, நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையாளர் , சென்னை அவர்கள் ஒப்புதல் ஆணை எண் 4774/UGSS/1/2018 நாள் 26/02/2018 பெறப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் ஆணையாளர் , சென்னை அவர்களால் தொழில் நுட்ப அனுமதி எண்18281 /2016/DOI நாள் 05.03.201 ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் 18.04.2018ல் கோரப்பட்டு மேற்கான் பணியினை M/s.VVV Construction Pvt Lmited,Chennai அவர்கள் மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தததாரர் அளவுகோல் பிரகாரம் 12 மாதத்திற்குள் முடிக்க கோரியும் பணிகளை உரிய கால கெடுவிற்குள் போதிய பணியாளர்களை கொண்டு உள் குழாய் கழிவுநீர் வீட்டு இணைப்புகள் 31.03.2019 வரை 1167 எண்ணிக்கை மட்டுமே செய்யப்பட்டுள்ளது.

**பள்ளி சத்துணவுத் திட்டம் 5+9, 10+14**

இத்திட்டம் 15–09–2002 முதல் செயல்பட்டு வருகிறது. எட்டு நகராட்சி நடுநிலைப்பள்ளியில் பயிலும் 5 வயது முதல் 9 வயதுள்ள 369 மாணவ, மாணவிகளுக்கும் 10 முதல் 14 வயதுள்ள 384 மாணவ, மாணவிகளுக்கும் அந்தந்த பள்ளியிலேயே பள்ளிச் சத்துணவு பொறுப்பாளரின் கண்காணிப்பின் கீழ் சமையலர் மற்றும் உதவியாளரால் சத்துணவு தயார் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

தங்கம்மாள் பெரியசாமி நாடார் நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் இத்திட்டம் 26–7–1984 முதல் செயல்பட்டு வருகிறது. தங்கம்மாள் பெரியசாமி நாடார் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 10 வயது முதல் 14 வயது வரையுள்ள 138 மாணவிகளுக்கு அந்தந்த பள்ளியிலேயே சத்துணவு பொறுப்பாளரின் கண்காணிப்பில் சமையலர் மற்றும் உதவியாளரால் சத்துணவு தயார் செய்து வழங்கப்பட்டு வருகிறது. அக்டோபர் 2002 முதல் வாரம் ஒரு நாள் பயறு வகைகள் உருளைக்கிழங்கு வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வாரமும் ஐந்து நாட்கள் முட்டை வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாண்டு 5 வயது முதல் 9 வயது மற்றும் 10 வயது முதல் 14 வயது முடிய உள்ள குழந்தைகளுக்கு சத்துணவு வழங்க அரசினரிடமிருந்து பெறப்பட்ட முன்மானியத் தொகை ரூ.463254/– செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 628506 /–

**நகராட்சிக்குச் சொந்தமான கட்டிடங்கள்**

| | | |
|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலகம் | 1 |
| 2 | பயணியர் விடுதி | 1 |
| 3 | நகராட்சி சத்திரம் | 1 |
| 4 | நகராட்சி பேருந்து நிலையம் | 2 |
| 5 | நகராட்சி பார உந்து நிலையம் | 1 |
| 6 | எப்.எப்.ரோடு, எம்.எஸ்.பி.ராஜா வணிக வளாகம் கடைகள் | 1 |
| 7 | சலவைத்துறை | 1 |
| 8 | எம்.எஸ்.பி.ராஜா வணிக வளாகம் கச்சேரி சாலை | 1 |
| 9 | மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வணிக வளாகம் மதுரை சாலை | 1 |
| 10 | புல்லலக்கோட்டை சாலை கடைகள் | 1 |
| 11 | பெ.சிசி.மகப்பேறு இல்லம் | 1 |

| | | |
|---|---|---|
| 12 | எஸ்.வி.அண்ணாமலையம்மாள் மகப்பேறில்லம் | 1 |
| 13 | தர்க்காஸ் தெரு ரேசன் கடை | 1 |
| 14 | நகராட்சி கடை குல்லூர்சந்தை ரோடு | 1 |
| 15 | அலுவலர்கள் குடியிருப்பு வீடுகள் | 4 |
| 16 | எல்.ஐ.ஜி.குடியிருப்பு வீடுகள் | 17 |
| 17 | புல்லலக்கோட்டை ரோடு துப்புரவு பணியாளர்கள் காலனி வீடுகள் | 86 |
| 18 | கழிவுநீர்ப்பண்ணை துப்புரவு பணியாளர்கள் வீடுகள் | 20 |
| 19 | ச.வெள்ளைச்சாமி நாடார் நூலகம் | 1 |
| 20 | துப்புரவு ஆய்வாளர் அலுவலகம் கச்சேரி ரோடு | 1 |
| 21 | நகராட்சி மேல்நிலைப்பள்ளி | 1 |
| 22 | நகராட்சி நடுநிலைப்பள்ளிகள், (6) உயர்நிலைப்பள்ளிகள் (2) | 8 |
| 23 | சித்த வைத்திய சாலை | 1 |
| 24 | கழிப்பறைகள் | 42 |
| 25 | சிறுநீர் கழிப்பிடங்கள் | 7 |
| 26 | நவீனக் கட்டணக் கழிப்பறைகள் | 2 |
| 27 | பூங்காக்குலூ | 8 |
| 28 | ஆணைக்குட்டம் நீரேற்று நிலையம் | 1 |
| 29 | கோடைகால நீர்த்தேக்க நீரேற்று நிலையம் | 1 |
| 30 | காருசேரி கல்குவாரி நீரேற்று நிலையம் | 1 |
| 31 | ஒண்டிப்புலி கல்குவாரி நீரேற்று நிலையம் | 1 |
| 32 | கழிவுநீரேற்று நிலையம் | 1 |
| 33 | தெப்பம் நீரேற்று நிலையம் | 1 |
| 34 | மேல்நிலை நீர்த்தேக்கங்கள் | 16 |
| 35 | தரைமட்ட நீர்த்தேக்கம் | 2 |
| 36 | எஸ்.வி.அண்ணாமலையம்மாள் படிப்பகம் | 1 |
| 37 | பர்மா பங்க் | 24 |
| 38 | கம்போஸ்ட் நிலையத்திலுள்ள லாரி செட் | 1 |
| 39 | கம்போஸ்ட் நிலைய கால்நடை செட் | 1 |
| 40 | கம்போஸ்ட் நிலைய எடை நிலையம் | 1 |
| 41 | கச்சேரி சாலை எம்.எஸ்.பி.ராஜா தினசரி மார்க்கெட் கடைகள் | 33 |
| 42 | மதுரை சாலைக் கடை வளாகம் | 12 |
| 43 | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.குழந்தைகள் கல்வி சத்துணவு கூடங்கள் | 24 |
| 44 | சங்கரன்கிணற்று தெரு கடைகள் | 6 |
| 45 | ஆடுவதை செய்யும் கூடம் கிருஷ்ணமாச்சாரி ரோடு | 1 |
| 46 | ஐஎச்டிபி.சமுதாய கூடம் (விஸ்வநாததாஸ் காலனி, அகமது நகர் , நாராயணமடம் , எப்.எப்.ரோடு | 4 |
| 47 | ஐஎச்டிபி.தொழில் மனைகடைகள்(விஸ்வநாததாஸ் காலனி) | 3 |
| 48 | சாமியண்ணன் கோவில் தெரு வணிகவளாகம் | 1 |
| 49 | பழைய பேரூந்து நிலைய பின்புறம் (மேற்கு பகுதி கடை) | 20 |
| 50 | அம்மா உணவகம் இரயில்வே பீடர் சாலை | 1 |
| 51 | ராமமூர்த்தி சாலை நகராட்சி அலுவலர்கள் மனமகிழ் மன்றம் | 1 |
| 52 | அகமது நகர் ரேசன் கடை | 1 |

| | | |
|---|---|---|
| 53 | பர்மாகாலனி ரேசன் கடை | 1 |
| 54 | பெரியகாளியம்மன் கோவில் தெரு ரேசன் கடை | 1 |
| 55 | மனமகிழ் மன்றம் பட்டுத் தெரு | 1 |
| 56 | மனமகிழ் மன்றம் சங்கரநாராயணபுரம் | 1 |
| 57 | நாய்கள் அடிக்கும் இடம் அகமது நகர் | 1 |

**பயணியர் விடுதி**

மதுரை சாலையில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் பயணியர் ஒய்வு விடுதி ஒன்று உண்டு. இந்த கட்டிடம் 1.4.94 முதல் பொது சுகாதார வாகன பராமரிப்புத்துறைக்கு மாத வாடகைக்கு விடப்பட்டிருந்தது. மேற்படி துறையினர் 30–04–2001 முதல் காலி செய்துவிட்டனர். தற்போது மராமத்து பணி முடிவுற்று அரசு அலுவலகத்திற்கு வாடகைக்கு எடுத்துக் கொள்ள எந்த துறையும் முன் வராததால் தனியாருக்கு அனுபவ உரிமைக்கு விடப்பட்டுள்ளது. 1–4–2013 முதல் 31–3–2016 வரை மாத வாடகை ரூ.16123/– எனவும் 1–4–2016 முதல் 31–3–2019 வரை வாடகை உயர்வு செய்து ரூ.29000/– எனவும் வாடகைக்கு விடப்பட்டு வசூல் செய்யப்பட்டுள்ளது.

**சத்திரம்**

புகைவண்டி நிலையத்திற்கு அருகாமையில் ரயில்வே பீடர் சாலையில் நகராட்சி சத்திரம் ஒன்று உள்ளது. அறிக்கை ஆண்டில் இந்த சத்திரம் காவல்துறையினரால் காலி செய்யப்பட்டு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**பிச்சைக்காரர் விடுதி**

பிச்சைக்காரர் விடுதினை மாற்றம் செய்து நீரேற்று நிலையம் மற்றும் சமுதாய கூடம் மற்றும் நியாயவிலைக்கடையாக கட்டப்பட்டுள்ளது.

**சலவைத்துறைக்கட்டிடம்**

சலவைத்துறைக் கட்டிடம் போதிய தண்ணீர் வசதி இல்லாததால் அறிக்கை ஆண்டில் செயல்படவில்லை. மேற்படி இடத்தில் ஆடு வதை செய்யும் கூடம் ரூ.10,00,000/– கடன் பகுதி II திட்டத்தில் கடன் பெறப்பட்டும் நகராட்சி பங்குத் தொகையாக ரூ.11,00,000/–த்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.363000/–க்கு குத்தகைக்கு விடப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**விளக்கு வசதிகள்**

அறிக்கையாண்டில் 3353 தெருவிளக்குகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவையாவன

| வ.எண் | விளக்குகள் விபரம் | 2018–2019 |
|---|---|---|
| 1. | குழல் விளக்குகள் | 2324 |
| 2. | சோடியம் விளக்குகள் | 372 |
| 3. | மெட்டல் விளக்குகள் | 59 |
| 4 | Solar Lays | 15 |
| 5 | LED | 579 |
| 6 | உயர்கோபுர விளக்கு | 4 |
| | மொத்தம் | 3353 |

தெருவிளக்குகளில் மின் கட்டணம் அளவுமானிப்படி செலுத்தப்பட்டது. தெரு விளக்குகள் வசதிக்காக ரூ.110.00 இலட்சம் அறிக்கையாண்டில் செலவு செய்யப்பட்டது. விளக்கு வரி தனியாக கணக்கிடப்படாமல் வருவாய் நிதியுடன் சேர்த்து கணக்கிடப்பட்டுள்ளது.

தெருவிளக்கு பணி தனியாரைக்கொண்டு இயக்குதல் மற்றும் பேணுதல் பணிகென ரூ.33.84 இலட்சம் அறிக்கையாண்டில் செலவு செய்யப்பட்டது அறிக்கையாண்டில் தனியாக கணக்கிடப்படாமல் வருவாய் நிதியுடன் சேர்த்து கணக்கிடப்பட்டுள்ளது.

## கல்வி ––ஆரம்பக்கல்வி

### கல்வி வசதிக்கான அமைப்புகள்

தமிழக அரசு கல்வித்துறையின் 9–3–90 ம் தேதிய 347 எண் அரசு ஆணையின்படி அனைத்து நகராட்சி பள்ளிகளின் நிர்வாகம் முழுவதும் அரசு கல்வித்துறைக்கு 1–4–90 முதல் ஒப்படைக்கப்பட்டது.

### பொது நூலகம்

அறிக்கையாண்டில் நகராட்சி தொடர்ந்து இரண்டு பொது நூல் நிலையங்களை நடத்தி வருகிறது. (1) கச்சேரி சாலையில் அமைந்துள்ள வெள்ளைச்சாமி நாடார் பொது நூல் நிலையம் (2) ஏ.பி.சண்முகம் தெருவில் அண்ணாமலையம்மாள் பெண்கள் படிப்பகம் ஆகியவையாகும். வெள்ளைச்சாமி நாடார் பொது நூல் நிலையத்தில் அறிக்கையாண்டில் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை 3455 ஆகும். அண்ணாமலையம்மாள் பெண்கள் படிப்பகத்தில் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை 170 ஆகும். இந்த வாசகசாலை பராமரிப்பிற்காக மொத்தம் செலவு ரூ.4600/– ஆகும். விருதுநகர் மாவட்ட நூலக ஆணைக்குழு கந்தபுரம் தெருவில் கிளை நூலகத்தையும் தொடர்ந்து நடத்தி வருகிறது. பாவாலி சாலை அகமது நகர் நகராட்சி நீர்த்தேக்கத் தொட்டி அருகில் மாவட்டநூலக ஆணைக்குழு அலுவலகம் இயங்கி வருகிறது.

சொத்துவரியின் கீழ் வசூலிக்கப்படும் நூலக வரி மாவட்ட நூலக ஆணைக்குழுவிற்கு செலுத்தப்பட்டு வருகிறது.

## பொது சுகாதாரம்

## மருத்துவ வசதி

### சித்த மருத்துவமனை

தங்கம்மாள் பெரியசாமி நாடார் நினைவு சித்த மருத்துவ மனைக்கு நோயாளிகள் வரப் பெறாததால் 21.4.2008 முதல் சித்த மருத்துவமனை மூடப்பட்டுவிட்டது. அதில் உள்ள நிரந்தரப் பணியாளர்களான 1 ஆண் மருத்துவ உதவியாளரும், 1 பெண் துப்புரவுப் பணியாளரும் பொது சுகாதாரப் பிரிவுக்கு மாற்றம் செய்யப்பட்டுவிட்டனர்.

இது தவிர இராமமூர்த்தி சாலையில் எம்.எஸ்.பி.நாடார் அரசினர் மாவட்ட தலைமை மருத்துவமனை ஒன்று தொடர்ந்து இயங்கி வருகின்றது.

பெ.சி.மருத்துவமனை தற்போது நகர ஆரம்ப சுகாதார நிலையமாக அதே கட்டிடத்தில் இயங்கி வருகிறது. எஸ்.வி.அண்ணாமலையம்மாள் நகராட்சி மகப்பேறு மருத்துவமனையில் அரசு மருத்துவமனை புற நோயாளிகள் பிரிவு–II இயங்கி வருகிறது.

## பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு அமைப்பும் அலுவலர்களும்

அறிக்கையாண்டில் நகர் நல அலுவலர் பணியிடம் காலியாக உள்ளது.

### பணியமைப்பு

| | | |
|---|---|---|
| நகர் நல அலுவலர் | .. | காலியாக உள்ளது. |
| துப்புரவு ஆய்வர் | .. | 3 |
| துப்புரவு மேற்பார்வையாளர் | .. | 6 |
| பொது காதாரப் பணியாளர்கள் | .. | 82 |
| ஓட்டுநர்கள் | .. | 7 |
| கிளினர்கள் | .. | 1 |
| அலுவலக உதவியாளர் | – | 1 |
| திடக்கழிவு அகற்றும் லாரிகள் | .. | 2 |
| திடக்கழிவு அகற்றும் டிராக்டர்கள் | .. | 2 |
| கழிவுநீர் அகற்றும் லாரி (ஜெட்ராடிங்) | .. | 2 |
| குப்பை அகற்றும் கை வண்டிகள் | .. | 30 |
| சைக்கிள் ரிக்ஷா | .. | 3 |
| பாதாள சாக்கடை மண் அகற்றும் ஆட்டோ வாகனம் | | 2 |
| மினி ஆட்டோ | – | 4 |
| BOV | -- | 20 |

நகராட்சி துப்புரவு பொது சுகாதார பணிகளுக்கு சம்பளமாக ரூ. 311.54/– லட்சம் அறிக்கையாண்டில் செலவிடப்பட்டது.

பொது சுகாதாரம், சுற்றுப்புற தூய்மை, மகப்பேறு, குழந்தைகள் நலன், சத்துணவு, தண்ணீர் மூலம் பரவும் தொற்று நோய்கள் மற்றும் கொசு ஒழிப்பு தடுப்பு பற்றிய பிரச்சாரங்கள் டெங்கு தடுப்பு பணிகள் குறித்து பொதுமக்களிடம் எடுத்துரைக்கப்பட்டது.

சிக்குன் குனியா, பன்றிக் காய்ச்சல் டெங்கு காய்ச்சல் போன்ற நோய்களைக் கட்டுப்படுத்த விழிப்புணர்வு முகாம் மற்றும் பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம்கள் ஆகியவை இந்த ஆண்டு நடத்தப்பட்டுள்ளது.

### பிறப்பு, இறப்பு பதிவுப்பணி

அறிக்கையாண்டில் 3 துப்புரவு ஆய்வாளர்களால் 900 பிறப்பு, இறப்பு பதிவு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. சென்ற ஆண்டு பதிவு எண்ணிக்கை 1055 ஆகும். அறிக்கை ஆண்டில் பதிவு செய்யப்பட்ட இறப்புகளின் எண்ணிக்கை 468 சென்ற ஆண்டு 485.

### தாய் சேய் நலம் குடும்ப நலத்திட்ட பணிகள்

நகராட்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 5 மகப்பேறு உதவியாளர்களும் 1 ஆயாவும் பணிபுரிந்து வருகின்றனர். நகராட்சியில் பணிபுரியும் மகப்பேறு உதவியாளர்களால் அறிக்கையாண்டில் கவனிக்கப்பட்ட பிறப்புகள் 48. நகராட்சிப் பகுதியிலுள்ள மருத்துவமனைகளில் அறிக்கையாண்டில் கவனிக்கப்பட்ட பிறப்புகள் 417

. குழந்தைகளின் இறப்பு வீதம் இந்த ஆண்டில் இறந்து பிறந்த குழந்தைகள் 739 கர்ப்பிணிகள் 773 பதிவு இரவு பகல் எந்த நேரத்திலும் அழைப்புகளை ஏற்றுக் கொள்வதற்காக ஒரு மகப்பேறு உதவியாளர் ஒரு ஆயா ஆகியோர் பொறுப்பில் உள்ளனர். ஒவ்வொரு விடுதியிலுள்ள மகப்பேறு உதவியாளர்கள் தங்கள் எல்லைக்குள் உள்ள பேறுகால சம்பந்தமான முன் பணிகள் பேறுகாலத்திற்குப் பின் உள்ள பணிகளையும் தினசரி வீடு வீடாக சென்று கவனித்து வருகின்றனர்.

நகரின் மத்தியில் வடக்கு ரதவீதியும் ரயில்வேபீடர் ரோடும் சந்திக்கும் இடத்தில் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் ராவ்பகதூர் பி.எஸ்.சிதம்பர நாடார் மீனாட்சிஅம்மாள் மகப்பேறு இல்லமும் குழந்தைகள் நல விடுதியும் அமைந்துள்ளன. ச.வெள்ளைச்சாமி நாடார் அண்ணாமலையம்மாள் நகராட்சி மகப்பேறு இல்லம் அருப்புக்கோட்டை சாலையில் உள்ளது. ஐந்து மகப்பேறு உதவியாளர்களும் ஒரு ஆயாவும் இரண்டு காவலர்களும் மேற்கண்ட இரு மகப்பேறு இல்லங்களில் தொடர்ந்து பணியாற்றுகின்றனர்.

## குடும்பக்கட்டுப்பாடு

இந்த ஆண்டுக்கான குடும்பக் கட்டுப்பாடு முகாம் அரசு மருத்துவமனையில் நடைபெற்றது. இந்த ஆண்டு நகராட்சிக்கு நிர்ணயிக்கப்பட்ட குடும்ப கட்டுப்பாடு குறியீடு 500 இதில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. நகராட்சி மகப்பேறில்லம் மற்றும் மகப்பேறு விடுதிக்கும் வரும் பொதுமக்களுக்கு மருத்துவ அதிகாரியால் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வதால் ஏற்படும் நன்மைகள் பற்றி ஆலோசனை வழங்கப்படுகிறது.

## நோய் தடுப்பு பாதுகாப்பு திட்டம்

அறிக்கையாண்டில் 0 முதல் 1 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும் பள்ளிக்குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கும் நோய் தடுப்பு ஊசி கீழ்க்கண்டவாறு போடப்பட்டது.

| 0–1 வயது குழந்தைகளுக்கு | 2018–2019 |
|---|---|
| 1. பி.சி.ஜி. | 870 |
| 2. முத்தடுப்பு ஊசி | 870 |
| 3. போலியோ சொட்டு மருந்து | 870 |
| 4. தட்டமை தடுப்பூசி | 870 |
| பள்ளிக் குழந்தைகளுக்கு | |
| 1. நோய் தடுப்பூசி DPT Br. | 1131 |
| 2. இரண ஜன்னி தடுப்பூசி | |
| 10 வயது | 1387 |
| 16 வயது | 1359 |
| கர்ப்பிணி பெண்களுக்கு | |
| இரண ஜன்னி (முதல் ஊசி) | 999 |
| தடுப்பூசி (இரண்டாவது ஊசி) | 999 |
| முத்தடுப்பு ஊசி ஊக்குவிப்பு | – |

**<u>அறிவிக்கப்பட்ட தொற்றுநோய்</u>**

இதர அறிவிக்கப்பட்ட தொற்றுநோயினால் எவரும் பாதிக்கப்படவில்லை. தொற்றுநோய்களினால் நகராட்சிப் பகுதியில் எந்த இறப்பும் நடைபெறவில்லை.

**<u>கொசு ஒழிப்பு திட்டம்:</u>**

இந்நகராட்சியில் கொசு ஒழிப்புக்கு திருத்திய திட்டம் ரூ.22000/– க்கு 6–4–70 தேதியிட்ட சுகாதாரதுறை 780 எண் அரசாணையில் அனுமதிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு சுகாதார ஆய்வாளர் மேற்பார்வையில் ஒரு நாளைக்கு ஒரு பகுதி என ஆறு நாட்களுக்கு கொசு ஒழிப்பு மருந்து தெளித்து கொசுவின் லார்வாவை கட்டுப்படுத்துதல் மற்றும் வார்காலில் தண்ணீர் தேக்கமில்லாமல் சுத்தம் செய்தல் ஆகிய வேலைகளை செய்து வருகின்றனர். விருதுநகர் முதுநிலை பூச்சியியல் அலுவலகத்திலிருந்து அறிக்கையாண்டில் மூன்று தடைவ முதுநிலை பகுப்பியல் வல்லுநர் மேற்படி திட்டத்தினை பார்வையிட்டார். அவரது ஆலோசனைகள் நிறைவேற்றப்பட்டன.

இந்த ஆண்டில் இதன் நிர்வாகம் மற்றும் சில்லரை செலவிற்காக ரூ.2795412/– செலவிடப்பட்டது.

**<u>குடியிருப்பு விபரம்</u>**

குடியிருப்பும் மற்றும் குடியிருப்பு இல்லாத கட்டிடங்கள் நகரில் 29866

**<u>திடக்கழிவுகள் சேமிப்புக் கிடங்கு</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான 125 ஏக்கர் நிலத்தில் கலவை உரக்கிடங்கிற்கென 13.7 ஏக்கர் நிலம் தெரிவு செய்யப்பட்டு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்திற்கு தடையில்லாச்சான்று கோரி விண்ணப்பிக்கப்பட்டு மாசுக்கட்டுப்பாடு வாரிய அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது நகராட்சியிலிருந்து படிவம் எண்.1 அறிக்கை (authorization) மாசுக்கட்டுப்பாடு வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

தற்போது நகராட்சியில் சேகரமாகும் கழிவுகள் நகராட்சி MCCயில் உரம் தயாரிக்கும் பணிகள் (நுண் உரமாக்கும் மையம்) நடைபெற்று வருகிறது. மறு கழற்றி செய்யக்கூடிய கழிவுகள் தனியாக சேமிக்கப்பட்டு வருகிறது.

**<u>அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில் உரிமம் கட்டணம்</u>**

அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்கள் யாவும் கட்டுப்படுத்தப்பட்டு அனுமதி வழங்கும் போது நிபந்தனைகள் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டன. மக்கள் வசிக்கும் பகுதி எனவும் தொழிற்சாலைப் பகுதி எனவும் தனித்தனியாக பிரிக்கப்பட்டு உரிமம் வழங்கப்பட்டு வருகிறது. அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான உரிமை சட்டத்தின் கீழ் அறிக்கையாண்டில் 1012 உரிமம் வழங்கப்பட்டன. உரிமக் கட்டணமாக ரூ.1220828/– வசூலிக்கப்பட்டுள்ளது.

**பொது சுகாதார துப்புரவு பணியாளர்கள் வசிக்கும் நிலை பற்றிய விவரங்கள்**

இந்த ஆண்டு இறுதியில் மொத்த சுகாதார பணியாளர்கள் எண்ணிக்கை 82 ஆகும். புல்லலக்கோட்டை சாலையில் நகர சுத்தி தொழிலாளர்களின் குடியிருப்பு நகராட்சியால் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இதில் 76 வீடுகள் உள்ளன. இவ்வீடுகளில் மின்சாரம் மற்றும் தண்ணீர் வசதி உள்ளது.

## குடிநீர் விநியோகம்

**விருதுநகர் குடிநீர்த்திட்டம்**

விருதுநகர் நகரில் குடிநீர் திட்டம் 10.08.32 ம் நாளிட்ட 1071 எண் அரசாணைப்படி ரூ.5.00 லட்சம் (ரூ.ஐந்து இலட்சம்) அனுமதிக்கப்பட்டு பொதுப் பணித்துறையினரால் 1937 ம் ஆண்டு பணி தொடஙகப்பட்டு 1938 ம் ஆண்டு வேலை முடிக்கப்பட்டது. 40000 மக்கள் தொகைக்கு குடிநீர் கிடைக்கும் நோக்குடன் இத்திட்டம் தயாரிக்கப்பட்டது.

இத்திட்டத்தில் பிரதான தலைமை நீரேற்று நிலையம் விருதுநகருக்கு 19 கிலோ மீட்டர் தென் மேற்கில் விருதுநகர்–சிவகாசி சாலையின் வடமேற்கிலிருந்து தென்கிழக்காக செல்லும் அர்ச்சுனா நதி படுகையில் ஆணைக்குட்டம் என்ற கிராமத்தில் அருகில் அமைந்துள்ளது.

மேலும் ஆணைக்குட்டம் தலைமைப்பணியிட குடிநீர் பிரதான குழாய் அடிக்கடி உடைப்பு ஏற்படுவதை சரிசெய்திட IUDM திட்டம் மூலம் 3150 மீட்டர் DI Main புதியதாக அமைக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

ஆற்றுப் படுகையில் அமைந்துள்ள தண்ணீர் சுத்தகரிக்கும் காலரி அமைப்பின் வழியாக சேமிப்புக் கிணற்றில் தேங்கும் நீரை 60 HP குதிரைத்திறன் கொண்ட இரண்டு மின்மோட்டார்கள் மூலம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து விருதுநகர் வரை 15 விட்டமுள்ள 64000 அடி நீளம் அமைக்கப்பட்டுள்ள இரும்புக் குழாய் மூலம் நீரேற்றப்பட்டு நகரின் மத்தியில் அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொன்றும் 675000 லிட்டர் கொள்ளளவுள்ள இரண்டு தொட்டிகளிடையே இரு மேல்நிலைத் தொட்டிகளிலும் 300000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு தொட்டிகளில் 200000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 5 தொட்டிகளிலும் 100000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 1 தொட்டியிலும் 60000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 7 தொட்டிகளிலும் 30000 கொள்ளளவு கொண்ட 2 தொட்டியிலும் நீர் நிரப்பப்பட்டு 3'' முதல் 12'' விட்டமுள்ள பகிர்மானக் குழாய் மூலம் நகரில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. தொடர்ந்து அபிவிருத்திப் பணிகளின்கீழ் 2004–2005ஆம் ஆண்டில் பிரதான மின் உந்துகளாகிய 40 மற்றும் 50 குதிரைத் திறன்களை முறையே 60 குதிரை திறன் மின் உந்துகளாக மாற்றப்பட்டு அர்ஜுனா ஆற்று படுகையில் அமைக்கப்பட்டுள்ள திறந்த வெளிக்கிறுகள் ஆழ்துளை கிணறுகள் மூலம் குடிநீர் பெறப்பட்டு நீரளிப்பு செய்யப்பட்டு வருகிறது.

**குடிநீர்த்திட்டம் கிணறுகள்**

30–7–88 தேதிய 963 எண் அரசாணையில் அனுமதிக்கப்பட்டபடி திறந்த வெளிக்கிணறுகள் 2 அமைக்கப்பட்டன. இதனையும் சேர்த்து தலைமை நீரேற்று நிலையத்தில் மொத்தம் திறந்த வெளிக்கிணறுகள் 12 உள்ளது.

1998–89 ஆம் நிதியாண்டில் தலைமை நீரேற்று நிலையம் ஆணைக்குட்டத்தில் 5 ஆழ்த்துளைக்கிணறுகளும் சுக்கிரவார்பட்டி கோடைக்கால நீர்த்தேக்க பம்பு ஹவுஸ்1 ஆக மொத்தம் 6 ஆழ்துளைக்கிணறுகள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

2003–2004 ஆம் நிதியாண்டில் நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அரசு நிதியின் கீழ் ஆணைக்குட்டம் தண்ணீர் தலைமையகத்தின் அருகில் சிவகாசி சாலை (சுவாமிஜி மில்ஸ் அருகில்) 10'' விட்டமுள்ள ஆழ்த்துளைக்கிணறு 1 மற்றும் 6'' விட்டமுள்ள ஆழ்த்துளை கிணறு 1 ம் ஆக மொத்தம் 2 எண்ணம் புதிய ஆழ்த்துளைக் கிணறு அமைக்கப்பட்டு இவைகளில் இருந்து எடுக்கப்படும் நீர் ஆணைக்குட்டம் பிரதான குழாயில் இணைத்து நகரின் தண்ணீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

2004–2005 ஆம் ஆண்டில் நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வறட்சி நிவாரண நிதியின் கீழ் ஆணைக்குட்டம் தலைமை நீரேற்று நிலையத்தில் திறந்த வெளிக்கிணறு ஒன்று புதியதாக அமைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து பம்பிங் செய்யப்படும் நீர் ஆணைக்குட்டம் சுத்த குடிநீர் சேகரிப்பு தொட்டியில் சேகரித்து நகரின் குடிநீர் வழங்கல் திட்டத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

<u>காருசேரி கல்குவாரி குடிநீர்த்திட்டம்</u>

காருசேரி கல்குவாரி தற்காலிக குடிநீர்த்திட்டம் 26–10–71 ம் தேதியிட்ட 2224 எண் அரசாணையில் ரூ.1.41 லட்சமும் அனுமதிக்கப்பட்டு இத்திட்டம் விருதுநகரில் இருந்து 19 கிலோ மீட்டர் தூரத்தில் அதாவது விருதுநகர் சிவகாசி சாலை மத்தியசேனை கிராமத்திலிருந்து கிழக்கில் 3 கிலோ மீட்டர் தூரத்தில் மெட்ராஸ் சிமிண்ட் கம்பெனியால் குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ள அரசு புறம்போக்கு கல்குவாரி அமைந்துள்ளது. கல்குவாரி நீரேற்று நிலையத்தில் இரண்டு 10 குதிரைத் திறன் நீரேற்றுகள் நிறுவப்பட்டு 10 அங்குலம் மற்றும் 9 அங்குலம் விட்டமுள்ள முறையே 1120 மீட்டர் 1054 மீட்டர் நீளம் அமைக்கப்பட்டுள்ள இரும்பு குழாய் மூலம் நீர் உந்தப்பட்டு தலைமை நீரேற்று நிலையத்திற்கு அனுப்பப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

2003–04 ஆம் ஆண்டில் ஆணைக்குட்டம் நீரேற்று நிலையம் அருகில் சிவகாசி சாலை (சுவாமிஜி மில்ஸ் அருகில்) 8'' விட்டமுள்ள ஆழ்த்துளைக் கிணறு 1 மற்றும் கோடைக்கால நீர்த்தேக்க நிலையத்தில் 8'' விட்டமுள்ள ஆழ்த்துளைக் கிணறு 1 ஆக மொத்தம் 2 எண்ணம் ஆழ்த்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு இவைகளிலிருந்து எடுக்கப்படும் நீர் ஆணைக்குட்டம் தலைமைப் பணியிடத்திலிருந்து நகர்ப் பகுதிகளுக்கு தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது.

<u>ஒண்டிப்புலி நாயக்கனூர் கல்குவாரி தண்ணீர் திட்டம்</u>

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய திட்ட உருவாக்க கோட்ட நிர்வாகப் பொறியாளரின் 1–8–85 ம் தேதிய எப் 4220 கடிதத்தின்படி மெட்ராஸ் சிமிண்ட்ஸ்

லிமிடெட் நிறுவனத்தினால் உபயோகித்து வரும் ஒண்டிப்புலி நாயக்கனூர் கல்குவாரியிலிருந்து விருதுநகருக்கு குடிநீர் கொண்டு வரும் கீழே குறிப்பிட்டுள்ள நான்கு நிலைகள் கொண்ட திட்டம் முடிக்கப்பட்டு 1989 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1 | தலைமை நீரேற்று நிலைய வேலை | ரூ. 10.79 லட்சம் |
| 2 | குழாய் பதித்தல் | ரூ.58.17 லட்சம் |
| 3 | மேல்நிலை நீர்த்தேக்கம் கட்டுதல் | ரூ.10.40 லட்சம் |
| 4 | பகிர்மானத் திட்டம் | ரூ.14.40 லட்சம் |
| 5 | மதிப்பீட்டு உயர்வு மேற்பார்வை மற்றும் சில்லரை செலவினம் ஆய்வுக் கட்டணம் முதலியன | ரூ.44,24 லட்சம் |
| | மொத்தம் | ரூ.138.00 லட்சம் |

மதராஸ் சிமெண்ட் லிமிடெட் நிறுவனத்திற்கும் நகர்மன்றத்திற்கும் இடையே இதற்கான ஒப்பந்தம் 6–10–08 அன்று ஏற்கப்பட்டது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண்.1405 நாள் 30–12–86 ல் இத்திட்டத்திற்கான நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு நகராட்சி ஏற்றுக் கொள்ள வேண்டிய பராமரிப்புச் செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ.2.96 லட்சம் ஆகும். .இத்திட்டத்திற்காக ஆயுள் காப்பீட்டுக் கழகம் கடனாக ரூ.8.353 லட்சம் அளித்துள்ளது.

ஒண்டிப்புலி கல்குவாரி உடனடி குடிநீர் திட்டப்பணி முடிவடைந்துவிட்டது. இக்கல்குவாரி தலைமையிடத்தில் 20 குதிரைத் திறன் மின்மோட்டார் நீரிறைப்புக்காக அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நாள் ஒன்றுக்கு 12 லட்சம் லிட்டர் தண்ணீர் கிடைக்கிறது. கல்குவாரியிலிருந்து விருதுநகர் வரை சுமார் 17.5 கிலோ மீட்டர் நீளம் 10 அங்குல சிமிண்ட் பிரதான குழாய் அமைக்கப்பட்டுள்ளது.

<u>**தெப்பம் தண்ணீர் விநியோகத் திட்டம்**</u>

பொது நலத்துறை அரசாணை எண்.2503 நாள் 14–12–65 ல் அனுமதிக்கப்பட்டு ரூ.1.10 லட்சம் மதிப்பீட்டில் இந்நகரில் மத்தியில் அமைந்துள்ள தெப்பக் குளத்திற்கு தனியாரால் தெப்பம் நிரப்பப்படுகிறது. இந்த தெப்பத்தை சுற்றிலும் அடிகுழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு நீரேற்றுகள் பொறுத்தப்பட்டு நீரிறைப்பு செய்து குடிநீர் அல்லாத வீட்டு உபயோகத்திற்கு தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் இந்த தெப்பத்தில் தண்ணீர் தேங்கி இருக்கும் போது நகரிலுள்ள பல அடிகுழாய்களிலும் திறந்த வெளிக் கிணறுகளிலும் போதிய தண்ணீர் அளவு 1800 சுரக்க ஏதுவாகிறது.

<u>**தாமிரபனி கூட்டுக் குடிநீர்திட்டம்**</u>

அரசு ஆணை எண்.302 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறை நாள் 25–08–2004 ன்படி தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கடலோர/ஊரக குடியிருப்புகள் மற்றும் விருதுநகர் மாவட்டத்திலுள்ள காரியாபட்டி, மல்லாங்கிணறு, ஊராட்சிகள், ஊரக குடியிருப்புகள் மற்றும் அருப்புக்கோட்டை, விருதுநகர் நகராட்சிகள் பயன்பெறும் வகையில், கூட்டுக் குடிநீர் திட்டம் ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மொத்த

மதிப்பீடு ரூ.6,800 லட்சங்கள் ஆகும். ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ.300 லட்சங்கள் ஆகும். இதன்படி விருதுநகர் நகராட்சியின் அமைப்புச் செலவு ரூ.1,753 லட்சங்கள் எனவும், ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ.72 லட்சங்கள் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் மூலம் பெறப்படும் குடிநீருக்கு குடிநீர் கட்டணம் தற்போது நகராட்சி மூலம் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்பட்டு வருகிறது.

இந்த கூட்டுக் குடிநீர் திட்டத்தினுடைய விருதுநகர் நகராட்சியின் அமைப்புச் செலவு ரூ.1.753 லட்சம் முழுவதையும் "தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் (TUFIDCO) மூலம் கடன் பெற்று மேற்கொள்வதற்கு இந்நகர்மன்றத்திய தீர்மான எண்.514 நாள் 30–08–2005 ன்படி ஒப்புதல்அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி குடிநீர்திட்டம் 2006–2007 ஆம் ஆண்டில் நிறைவு பெற்று 2007ஆம் ஆண்டு முதல் குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. மேலும் மேற்படி திட்டத்திற்க்கு வட்டியில்லா (TUFIDCO) மூலம் கடன் பெற்று மேற்படி கடன் தொகை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நகராட்சியால் வழங்கப்பட்டு உள்ளது.

<u>புதிய குடிநீர் திட்டம்</u>

விருதுநகர் நகரரட்சியின் மொத்த பரப்பளவு 6.64 சதுரகிலோமீட்டராகும். மொத்த மக்கள் தொகை 72144. தற்போது விருது நகர் பகுதியின் குடிநீர் ஆதாரமாக இரண்டு திட்டங்கள் மூலம் குடிநீர் கிடைக்கிறது. தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டம் (CWSS), வல்லநாடு, மற்றும் நகராட்சிக்கு சொந்தமான ஆனைக்குட்டம் குடிநீர் திட்டம் (Own Source), மூலம் கிடைக்கும் குடிநீரினைக் கொண்டு விருது நகர் பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆனைக்குட்டம் குடிநீர் திட்ட தலைமை பணியிடத்தின் மூலம் வரையறுக்கப்பட்ட குடிநீரின் அளவு 40.00 லட்சம் லிட்டர் ஆகும். தற்போது 25.00 இலட்சம் லிட்டர் குடிநீர் மட்டுமே கிடைக்கின்றது. மேலும் வறட்சிகாலங்களில் ஆனைக்குட்டம் நீர் ஆதாரம் வற்றிவிடுவதால் 6 மாத காலத்திற்க்கு நீர்வரத்து இருப்பதில்லை. தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் வரையறுக்கப்பட்ட குடிநீரின் அளவு 38.70 இலட்சம் லிட்டர். தற்போது இத்திட்டத்தின் மூலம் சராசரியாக நாள் ஒன்றுக்கு 25.00 இலட்சம் லிட்டர் குடிநீர் மட்டுமே கிடைக்கின்றது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. இதன் படி விருதுநகர் நகர் பகுதி மக்களுக்கு மொத்தம் 9.87 மில்லியன் லிட்டர் குடிநீர் தேவைப்படுகிறது. தற்போது சராசரியாக 5.00 மில்லியன் லிட்டர் மட்டுமே பெறப்படுகிறது. வரையறுக்கப்பட்ட அளவில் 5.00 மில்லியன் லிட்டர் குறைவாகவே (short fall) கிடைக்கிறது. மேலும் விருதுநகர் பகுதிக்கு பாதாள சாக்கடை திட்டம் பணிகள் முடியும் தருவாயில் இருப்பதால் அதற்காக கூடுதலாக தண்ணீர் தேவைப்படும். மேலும் வறட்சிகாலங்களில் 6 மாதங்களுக்கு ஆனைக்குட்டம் குடிநீர் திட்டம் (அர்ஜீனாஆறு) படுகையில் மழைநீரை சேமித்து அருகே உள்ள கிணற்றுகளின் ஊற்றுகள் மூலமாக மட்டுமே ஆனைக்குட்டம் மூலம் குடிநீர் கிடைக்க கூடிய சூழ் நிலையில் இருந்து வருகிறது. மேலும் வரையறுக்கப்பட்ட குடிநீர் அளவு 38.70 இலட்சம் லிட்டரில் சராசரியாக 25.00 இலட்சம் லிட்டர் மட்டுமே குடிநீர் கிடைக்கிறது. எனவே குடிநீர் தட்டுப்பாட்டை போக்குவதற்காகவும், பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படும் கால அளவை (No.of Days) குறைக்கவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம்

அமைத்து கொடுத்தால் விருது நகர் பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு இருக்காது. எனவே புதியதாக கூட்டுக் குடிநீர் திட்டம் அமைத்தால் பயனுள்ளதாக இருக்கும். பாதாள சாக்கடை திட்டம் பணிகள் அனைத்தும் முடியும் தருவாயில் இருப்பதால் உடனடியாக கூடுதலாக தண்ணீர் தேவைப்படும்.

எனவே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் அருப்புக்கோட்டை, சாத்துார், விருதுநகர் நகராட்சிகளுக்கு மட்டும் புதியதாக கூட்டு குடிநீர் திட்டம் தயாரிக்க மாண்பு மிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் 2017–2018 கேட்பு 34ன் படி சட்ட மன்ற சிறப்பு கூட்ட அறிவிப்பு பிரகாரம் அருப்புக்கோட்டை, சாத்துார் மற்றும் விருதுநகர் நகராட்சிக்கு புதியதாக கூட்டு குடிநீர் திட்டம் பற்றி விரிவான திட்ட அறிக்கை தற்போது தயாரிக்க எதிர் பார்ப்பு தொகை ரூ2.00 (இரண்டு இலட்சம்) செலுத்தப்பட்டு இப்புதிய கூட்டுக்குடிநீர் திட்டம் பணிகள் அமைக்க தேவையான திட்டவிபர அறிக்கை வழங்கும் பணிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ள வழியுறுத்தி இந்நகர் மன்ற தீர்மானம் எண் 206 நாள் 20.09.2017ல் அனுமதி பெறப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது .

**<u>தானியங்கி குடிநீர் வழங்கும் திட்டம் (Water ATM)</u>**

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2018–19ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறைக்கான மானியக் கோரிக்கை எண் 34 அறிவிப்பு எண் 14ல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் ( Automatic vending centre) நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது என்பதிற்கணிங்க விருதுநகர் நகராட்சியில் உள்ள 36 வார்டுகளிலும் வார்டுக்கு1 வீதம் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் பொதுகிணறு மற்றும் ஆழ்துளைக்கிணற்று நீரை ஆதாரமாக கொண்டு தீவிர வடிகட்டுதல் மற்றும் எதிர் சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கும் வண்ணம் சுத்திகரிக்கும் இயந்திரம் நிறுவ ஏற்படும் செலவினத்தொகை ஒன்றுக்கு உத்தேசமதிப்பீட்டு தொகை ரூ.18.00 இலட்சம் (ரூபாய் பதினாறு லட்சம்) வீதம் மொத்தம் 36 வார்டுகளில் ரூ. 648.00 இலட்சம் (ரூபாய் ஆறு நூற்றி நாற்பத்தி எட்டு இலட்சம்) ஆகும்.

தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automaticvendingcentre) மூலதன செலவினத்தை தனியார் தொழில்நிறுவனம் / தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையில் இருந்து ஈடு செய்து கொள்ளவும் உரிய தொழில்நுட்ப நுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில்“Expressionof Interest” விளம்பரம் செய்து தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்யவும் , இயக்குதல் பராமரித்தல் செலவினத்தை பயனாளிகளிடம் இருந்து பெறப்படும் கட்டணத்தில் இருந்து ஈடு செய்து கொள்ளவும் மின் கட்டணத்தை தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் செலுத்தவும், நகராட்சி மூலம் இடம் மற்றும் நீர் ஆதாரம் மட்டும் வழங்கவும் திட்டமிட்டு நகர்மன்ற தீர்மானம் எண்152 நாள் 25.10.2018ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 5 இடங்களில் அமைக்க ஒப்பந்தப்புள்ளி 16.11.2018ல் கோரப்பட்டதில் திரு, தர்னா இன்பிராஸர் புராசெட் நிறுவனம் சென்னை அவர்கள் ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டதை தொடர்ந்து பணி உத்திரவு 06.12.2018ல் வழங்கப்பட்டு உள்ளது, மேற்படி பணிக்கு ஒப்பந்தப்பத்திரம் பெறப்பட்டு பணி மேற்கொள்ளாமல் இருந்து வருகிறது.

இரண்டாம் கட்டமாக 27 இடங்களில் அமைக்க 21.01.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதில் திரு மிஸ்டிபியுர் டெக்னாலாஜி பிரைவேட் லிமிடெட், காரியாபட்டி விருதுநகர் மாவட்டம் அவர்கள் ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டதை தொடர்ந்து பணி உத்திரவு 06.02.2019ல் வழங்கப்பட்டு உள்ளது மேற்படி பணிக்கு ஒப்பந்தப்பத்திரம் பெறப்பட்டு இத்திட்டத்தின் மூலம் 3–வது வார்டுக்கு உட்பட்ட புல்லலக் கோட்டை சாலை பகுதியில் உள்ள பழைய பேருந்து நிலையத்தில் நிறுவி நாள் ஒன்றுக்கு சுமார் 10,000 லிட்டர் வீதம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கிடவும் இதன் மூலம் சுமார் 2000 நபர்கள் பயடையும் வகையில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது என்ற விவரம் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>பொது</u>

அறிக்கையாண்டில் 285 பொது குடிநீர் குழாய்கள் உள்ளன. அதில் ஒற்றை குழாய் 255 ம் 30 இரட்டைக் குழாய்களும் உள்ளன. அறிக்கையாண்டில் குடிநீர் திட்ட பராமரிப்பு செலவு ரூ. 13325800/– ஆகும். நகரில் 185 அடிகுழாய்களும் 385 தானியங்கி குழாய்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் நபருக்கு 65 முதல் 75 லிட்டர் வரையிலான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. 1000 லிட்டருக்கு செலவு ரூ.12.48 ஆனது. தண்ணீர் விநியோக குடிநீர் குழாய் இணைப்புகள் மொத்தம் 12840 இதில் நடப்பு ஆண்டில் 212 குடிநீர் குழாய் இணைப்புகள் கொடுக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் விநியோகத்திற்காக வசூலிக்கப்பட்ட தொகை ரூ.111.19 /– லட்சம் ஆகும்.

<u>கழிவுநீர் வாய்க்கால்</u>

1941 ஆம் ஆண்டில் ரூ.63 லட்சம் மதிப்புள்ள பிரதான கழிவுநீர் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. யுத்த நெருக்கடி காரணத்தினால் நிறுத்தப்பட்டுவிட்டது. பிறகு ரூ.1,00,000/– மதிப்பு குறைக்கப்பட்ட வார்கால் திட்டம் தயார் செய்யப்பட்டு உள்ளது.

<u>பொது நலமும் பாதுகாப்பும்</u>

நகரில் சுற்றித்திரியும் பன்றிகள் அவ்வப்போது பிடித்து அப்புறப்படுத்தப்படுகிறது. நகரில் தீ தடுப்பு நிலையம் ஒன்று அரசு பராமரிப்பிலிருந்து வருகிறது. அதற்கு ஆம்புலன்ஸ் உண்டு. சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் பொறியியல் பிரிவு அலுவலர்கள் குடிநீரில் தக்கபடி குளோரிநேசன் செய்யப்பட்டு வருவதை நாள்தோறும் ஆய்வு செய்து வருகிறார்கள்.

<u>வருவாய் வரத்தக்க இனங்கள்</u>

<u>போக்குவரத்து</u>

நகராட்சியில் போக்குவரத்து ஏற்று நடத்தப்படவில்லை. சென்ற ஆண்டைப் போலவே இவ்வாண்டிலும் 13 வழித்தடங்களில் நகரப் போக்குவரத்துக்கள் இயக்கப்படுகின்றன. வேகமாக ஓடும் பேருந்துகள் பார உந்துகள் இந்நகரில் இருந்து மற்ற இடங்களுக்கு செல்கிறது.

<u>சந்தைகள், வண்டி நிற்கும் இடங்கள் ஆடுவதை செய்யும் விடுதி மற்றவைகள்</u>

நகராட்சிக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் கிடைத்த சாதாரண வருமானம்

| ஆண்டு | சந்தை<br>ரூ. | வண்டிநிற்கும் இடம்<br>ரூ | பேருந்து நிலையம்<br>ரூ | ஆடுவதை செய்யும் இடம்<br>ரூ |
|---|---|---|---|---|
| 2013–2014 | 672000 | – | 1361955 | 20855 |
| 2014–2015 | 705600 | –– | 1905826 | 126898 |
| 2015–2016 | 2150000 | –– | 3094593 | 666000 |
| 2016–2017 | 2257500 | 1260000 | 921900 | 317766 |
| 2017–2018 | 2370375 | 1323000 | 967995 | 333654 |
| 2018–2019 | 2282000 | 725000 | 650000 | 350337 |

அறிக்கையாண்டில் இந்நகராட்சிப் பகுதியில் மூன்று தனியார் சந்தைகள் உள்ளது. இவைகளில் ஒன்று காய்கறிக்காகவும் மற்ற இரண்டும் பருத்திக்காகவும் உள்ளன.

**வண்டி நிற்குமிடங்கள்**

நகராட்சிக்குச் சொந்தமான வண்டி நிற்குமிடம் கிடையாது. இரண்டு தனியார் வண்டி நிற்குமிடங்கள் உள்ளன. அங்கிருந்து வாடகைதாரர்களுக்கு மாட்டு வண்டிகளிலிருந்து சரக்கு ஏற்றவும் இறக்கவும் செய்யப்படுகிறது. அதற்கான உரிமம் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

**நகராட்சி பேருந்து நிலையம்**

விருதுநகர் டவுண் புல்லலக்கோட்டை சாலை புளுகணூரணி சாலை சந்திக்கும் இடத்தில் 4283.61 ச.மீ.பரப்பளவு உள்ள இடத்தில் இந்நகராட்சி பழைய பேருந்து நிலையம் இயங்கி வருகிறது. இப்பேருந்து நிலையத்திற்கு எம்.எஸ்.பி.நாடார் நகராட்சி பேருந்து நிலையம் என பெயரிடப்பட்டுள்ளது. இப்பேருந்து நிலையம் சுமார் 40 ஆண்டுகளாக மேற்படி இடத்தில் இயங்கி வருகிறது. இப்பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்குவதற்கு தங்கும் அறை வசதி உள்ளது. ஒரு கட்டணக் கழிப்பிடமும் இயங்கி வருகிறது. பயணிகள் நலனுக்காக ஆண் மற்றும் பெண்களுக்கு பொது கழிவறைகள் தனித்தனியாக பராமரிக்கப்பட்டு வருகிறது. பேருந்து நிலையத்தினை ஒட்டி பயணிகள் வசதிக்காக சைக்கிள் ஸ்டாண்ட் ஒன்று செயல்பட்டு வருகிறது. தற்போது இப்பேருந்து நிலையம் எம்.எஸ்.பி.நாடார் பேருந்து நிலையமாக செயல்பட்டு வருகிறது.

**நகராட்சி புதிய பேருந்து நிலையம்**

நகராட்சி பேருந்து நிலையம் இட நெரிசலை கருத்தில் கொண்டு சாத்தூர் சாலையில் நகராட்சிக்குச் சொந்தமான 1.41. ஹெக்டேல் நிலத்திலும், தனியாருக்குச் சொந்தமான 1.09 ஹெக்டேர் நிலத்தையும் சேர்த்து மொத்தம் 2.50 ஹெக்டேர் நிலத்தில் உலக வங்கி உதவியுடன் ரூ.55.00 லட்சம் செலவில் 25–8–91 ம் தேதி புதிய பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டது. நகராட்சி பொதுநிதியில் இருந்து ரூ.22.00 லட்சம் செலவில் சுற்றுச்சுவர் கட்டுதல், மழைநீர் வடிகால் கட்டுதல், பாலம் கட்டுதல் முதல் தளத்தில் கடைகள் கட்டுதல், மின்விளக்கு வசதிகள் போன்ற பணிகள் செய்து

முடிக்கப்பட்டன. புதிய பேருந்து நிலையத்தை கட்டுவதற்காக நகராட்சியால் எடுத்துக் கொள்ளப்பட்ட தனியார் நிலத்திற்கு ஈடு செய்வதற்காக நகராட்சிக்குச் சொந்தமான 524/3 உள்ள இடத்தில் 6501 சதுர அடி நிலத்தினை பரிவர்த்தனை மூலம் வழங்க அரசிற்கு அனுமதி கோரி இவ்வலுவலக கோப்பு எண்.எப்1/1740/2000 மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பல்வேறு காலக்கட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் உத்திரவு பிறப்பிக்கப்படும் தனியார் பேருந்து உரிமையாளர்களால் மாநில போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாணையத்தில் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டும் மேற்படி வழக்குகளின் பேரில் தீர்ப்புகள் வழங்கப்பட்டு தற்போது முழுமையாக இயக்கப்பட்டு வருகிறது. அதில் பேருந்து ஒன்றுக்கு நுழைவுக்கட்டணமாக ரூ.14/– வீதம் வசூலிக்கப்பட்டு வருகிறது. பேருந்து நிலைய நுழைவுக் கட்டணம் மூலம் ரூ.878000/– வரப்பெற்றது.

<u>ஆடுவதை செய்யுமிடம்</u>

ஆடுவதை செய்யும் விடுதி ஒன்று நகராட்சிப் பொறுப்பில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. ஒரு வெள்ளாடு அல்லது செம்மறியாடு அடிக்க ரூ.50/ கட்டணமாக வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்தக் கட்டணம் வசூல் செய்யும் உரிமை குத்தகைக்குவிடப்பட்டுள்ளது. அதன் மூலம் நடப்பு ஆண்டில் வருமானம் ரூ.336000/– ஆகும்.

<u>குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான குடியிருப்புகள்</u>

நகர்மன்றத்தினால் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்காக ‘‘அ’’பிரிவு அமைப்பில் 14 வீடுகளும் ‘‘ஆ’’ பிரிவில் 40 வீடுகளும் கட்டி வாடகைக்கு விடப்பட்டிருந்தது. அரசின் அனுமதியுடன் ‘‘அ’’ பிரிவு 12 வீடுகளும் ஆ பிரிவில் 25 வீடுகளையும் லாபம் நட்டம் இல்லாத அடிப்படையில் குடியிருப்பவர்களுக்கே கிரையம் செய்து கொடுக்கப்பட்டுவிட்டது. நகர்மன்றத்தின் 30–12–72 ம் தேதிய 117 எண் தீர்மானத்தின் பிரகாரம் அ பிரிவு வீடுகளுக்கு மாதம் ரூ.50/– எனறும் ஆ பிரிவு வீடுகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.25/– என்றும் நிர்ணயம் செய்து 1.1.73 முதல் வாடகை வசூல் செய்யப்பட்டதை நகர்மன்றத் தீர்மான எண்.724 நாள் 22.11.89 ன்படி அ பிரிவு வீடுகளுக்கு ரூ.150/– ம் ஆ பிரிவு வீடுகளுக்கு ரூ.75/– மாதம் தோறும் வாடகையாக 1.1.90 முதல் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு வாடகை மூலம் கேட்பு ரூ.9,800/– இக்குடியிருப்புகளுக்குரிய வாடகை சிறிய தொகையாக உள்ளது என்றும் வாடகையினை உயர்த்த வேண்டும் என்றும் நகர்மன்றம் விரும்புவதால் நகர்மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்க தனி நடவடிக்கை தொடரப்படும்.

<u>நகராட்சி அதிகாரிகள் எழுத்தர் இல்லங்கள்</u>

கல்லூரி சாலையில் அதிகாரிகளுக்கு 4 வீடுகளும் இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. எழுத்தர் குடியிருப்பில் 9 வீடுகளை லாப நட்டமில்லாத அடிப்படையில் அதில் குடியிருப்பவர்களுக்கு அரசினர் அனுமதியுடன் கிரையம் செய்து கொடுக்கப்பட்டது.

<u>தொழிற்சாலையும், தொழிற்கூடங்களும்</u>

நகராட்சி எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளை காலமுறைப்படி ஆய்வு செய்து குறைகள் இருந்தால் நிவர்த்தி செய்யும்படி அறிவுரைகள் கூறப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளில் கண்டுள்ள குறைகளையும் சொந்தக்காரர்கள் அவ்வப்போது நிவர்த்தி செய்துள்ளனர். தொழிற்சாலைகள் அனைத்தும் தேவையான உரிமம் பெற்றுள்ளது.

**<u>பொது பூங்காவும் தோட்டங்களும்</u>**

அறிக்கையாண்டில் நகர்மன்றம் 9 பூங்காக்களை பராமரித்து வந்தது.

1) வி.என்.பி.ஆர்.பூங்கா
2) எம்.எஸ்.பி.நாடார் பூங்கா
3) எஸ்.வெள்ளைச்சாமி நாடார் பூங்கா
4) வி.வி.ஆர்.பூங்கா
5) லட்சுமி காலனி பூங்கா
6) கே.ஆர். பூங்கா
7) சில்வீஸ் லேஅவுட் பூங்கா
8) மோகன் ராஜேஸ் லேஅவுட் பூங்கா – 1
9) மோகன் ராஜேஸ் லேஅவுட் பூங்கா – 2

வி.என்.ஆர்.பூங்காவில் விருதுநகர் நகராட்சி பகுதியில் சிறுவர்கள் விளையாடுவதற்காக விளையாட்டுக் கருவிகள் அனுமதித்துக் கொடுக்கப்பட்டு நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

நகராட்சி பராமரிப்பில் உள்ள பூங்காக்களில் வி.என்.பி.ஆர்.பூங்கா 8.68 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. அதனை நூற்றாண்டு விழா நிதி மூலம் பராமரிப்பு செய்யப்பட்டு மக்கள் நலனுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**<u>தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் 2014–2015 (NULM)</u>**
**<u>நிதியுதவி</u>**

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் செயல்படுவதற்கு மத்திய அரசு 75 சதவீதமும் மாநில அரசு 25 சதவீதமும் நிதியுதவி வழங்கி வருகிறது. 2014–2015 ஆம் ஆண்டில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் இந்நகராட்சிக்கு மின் அஞ்சல் பரிமாற்ற வழியாக பின்வரும் அலகுகளுக்கு மான்யம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | அலகுகளின் விபரம் | மான்ய விபரம் (ரூ) | | |
|---|---|---|---|---|
| | | மத்திய அரசு ரூ | மாநில அரசு ரூ | மொத்த தொகை ரூ |
| 1 | சமூக ஒருங்கிணைப்பு மற்றும் திறன் வளர்ச்சி | **4.67** | **1.56** | **6.23** |
| 2 | திறனாக்க பயிற்சி | –– | –– | –– |
| 3 | சுயவேலை வாய்ப்புத்திட்டம் | **7.75** | **8.58** | **10.33** |
| 4 | திறன் மேம்பாடுத்துதல் மற்றும் | –– | –– | –– |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயிற்சி | | | |
| 5 | வீடற்றவர்களுக்கு வாழ்விடம் அமைத்தல் | **15.34** | **5.12** | **20.46** |
| 6 | வீதியோர வியாபாரிகளுக்கு உதவுதல் | **3.30** | **1.10** | **4.40** |
| 7 | நிர்வாகம் மற்றும் அலுவலக செலவு | **——** | **——** | **——** |
| 8 | தகவல் தொடர்பு | **1.60** | **0.53** | **2.13** |
| | மொத்தம் | **32.66** | **10.89** | **43.55** |
| | | | | |

**<u>நகரமைப்புத்திட்டம்</u>**

1971 ம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புத்திட்டம் இந்நகராட்சியில் 15–9–1973 ம் தேதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. .தமிழக அரசு உள்ளாட்சித் துறையின் 6–11–1974 ம் தேதிய எம்.எஸ்.2379 எண் உத்திரவில் விருதுநகர் நகராட்சிப் பகுதியை உள்ளூர் திட்டப்பகுதியாக உள்ளூர் அமைப்பாணை குழு அறிவித்துள்ளது.

**<u>விரிவு அபிவிருத்தி திட்டம்</u>**

நகரில் அபிவிருத்திக்காகவும் விஸ்தரிப்பிற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் தயாரிக்கப்பட்ட நகரமைப்பு திட்டங்கள் பின்வருமாறு

**<u>கத்தாளம்பட்டி நகரமைப்புத்திட்டம்</u>**

இத்திட்டத்தில் மொத்த பரப்பளவு 107 ஹெக்டேர் ஆகும். இத்திட்டம் 29–5–1953 ம் தேதி பொது சுகாதாரத்துறையினரின் 1152 ம் எண் அரசாணையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மாறுதல்கள் செய்யப்பட்டதற்கு இறுதியாக 22–6–1967 ம் தேதிய ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையினரின் 1188 ம் தேதிய அரசாணையில் திட்ட மாற்று அங்கீகரித்து உத்திரவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் அடிப்படை வசதிகளான சாலைகள் அமைத்தல், தெருவிளக்குகள் அமைத்தல், பூங்கா அமைத்தல், ,குடிநீர் குழாய்கள் அமைத்தல் மற்றும் சந்தைகள் அமைத்தல் ஆகிய பெரும்பாலான வசதிகள் பொதுமக்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மாறுதல்கள் செய்யப்பட்டதற்கு இறுதியாக 22–6–1967 ம் தேதிய ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையினரின் 1188 ம் தேதிய அரசாணையில் திட்ட மாற்று அங்கீகரித்து உத்திரவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் அடிப்படை வசதிகளான சாலைகள் அமைத்தல், தெருவிளக்குகள் அமைத்தல், பூங்கா அமைத்தல், குடிநீர் குழாய் அமைத்தல் மற்றும் சந்தைகள் அமைத்தல் ஆகிய பெரும்பாலான வசதிகள் பொதுமக்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட மேற்படி திட்டத்தில் தற்போதுள்ள அபவிருத்திகளை கருத்தில் கொண்டு ஏற்பட்டுள்ள ஒருங்கிணைந்த திட்ட மாறுதல்களுக்கு 29–9–92 ம் தேதிய 61 ம் எண் உள்ளூர் திட்டக்குழு தீர்மானம் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்து அனுப்பியுள்ளார். 20–2–97 ம்

தேதியில் நகர் ஊரமைப்பு இயக்குநர் மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களை இது சம்பந்தமாக தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டது.

**காமராஜர் ரோடு பைபாஸ் நகரமைப்புத்திட்டம்**

இத்திட்டத்தின் மொத்தப்பரப்பளவு 76.5 ஹெக்டேர் ஆகும். இத்திட்டம் 16–7–1971ம் தேதிய ஊர்வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையினரின் 1669 ம் எண் அரசாணையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பி1 பி1 60 அடி அகலச்சாலை ரயில்வே இடத்தினைத் தவிர மீதமுள்ள பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 30 அடி அகலச்சாலை அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் சில பகுதிகளை வறியோர் வாழும் பகுதியாக மாற்ற எப்/15158/89 7734/90 கோப்புகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டு கருத்துரு நகர் ஊரமைப்புத்துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஒட்டு மொத்த திட்ட மாற்றங்கள் இடத்தின் வளர்ச்சிக்கேற்றார் போல் மேற்கொள்ள நகர் ஊரமைப்புத்துறை இயக்குநர் அலுவலக மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**பெருவழி பைபாஸ் பாதை நகரமைப்புத்திட்டம்**

இத்திட்டத்தின் மொத்த பரப்பளவு 80.13 ஹெக்டேர் ஆகும். இத்திட்டம் 21–10–1973 ம் தேதிய ஊர்வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையினரின் 2322ம் எண் அரசாணையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பி1 பி1, பி2 பி2 மற்றும் பி3 பி3 ஆகிய 60 அடி அகல சாலையை நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. பாக்கியுள்ள 70 அடி அகலத்தில் விஸ்தரிப்பு செய்ய சாலை அமைக்க நில ஆர்ஜிதம் செய்ய நகராட்சியின் நிதி நிலைமை அபிவிருத்தி அடைந்த பின் அமைக்க நடவடிக்கை எடுக்கலாம். மேற்படி திட்டத்தில் ஏற்பட்டுள்ள திட்டட மாறுதல்களுக்கு ஒட்டு மொத்த திட்ட மாற்றுப் பிரேரணை உள்ளூர் திட்டக்குழு தீர்மானத்துடன் நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு வரைபடங்களுடன் அனுப்பப்பட்டுள்ளது.

**எம்.எஸ்.பி.நகர் விரிவு அபிவிருத்தித்திட்டம்**

இத்திட்டத்தின் மொத்தப் பரப்பளவு 61.53 ஹெக்டேர் ஆகும். இத்திட்டம் சென்னை, நகர் ஊரமைப்பு இயக்குநரின் 6.7.83 ம் தேதிய ந.க.எண்.19036/82/டி.வ.எண்.செயல்முறைகளில் 1071 ஆம் வருடத்திய தமிழ்நாடு நகரமைப்புச் சட்டப் பிரிவு 29 ன்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இட வளர்ச்சிக்கேற்றார்போல் துணைத் திட்ட வரைபடத்தை மாற்றி அமைக்க ஒட்டு மொத்த திட்ட மாற்றங்கள் மேற்கொள்ள நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் மூலமாக நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**இராஜாஜி நகர் விரிவு அபிவிருத்தித்திட்டம்**

இத்திட்டத்தின் மொத்தப் பரப்பளவு 55,82 ஹெக்டேர் ஆகும். இத்திட்டம் சென்னை, நகர் ஊரமைப்பு இயக்குநரின் 5.3.86 ம் தேதிய ந.க.எண்.24363/84/டி2 எண்

செயல்முறைகளில் 1971 ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகரமைப்புச் சட்டப் பிரிவு 29ன்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இடத்திற்கும் வரைபடத்திற்கும் வேறுபாடுகள் இருப்பதால் திட்ட மாற்றங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க மதுரை, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

**<u>புதிய விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்</u>**

இத்திட்டத்தின் மொத்தப் பரப்பளவு 198.42 28.1.91 ம் தேதிய உள்ளூர்த்திட்டக்குழு தீர்மான எண்.1ல் நகர் ஊரமைப்பு சட்டம் 19ன் கீழ் விரிவு அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கவும் பிரசுரம் செய்யவும் தீர்மானித்துள்ளது. இதன்படி விரிவு அபிவிருத்தி திட்டம் தயாரித்தல் ஒப்புதல் அளித்தல் விதி 3ன் கீழ் மாவட்ட அரசிதழ் செய்தித்தாள் மற்றும் திட்டக் குழு அலுவலகங்கள் ஆகியவற்றில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

வரைபடம் எண்1. தயாரித்து ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநரால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. வரைபடம் எண்.2 தயாரிக்கப்பட்டு மேற்படி வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள நில உபயோகங்களுக்கு நில சுவான்தாரர்களின் கூட்டம் கூட்டப்பட்டு ஆலோசனை மற்றும் ஆட்சேபனை பெறப்பட்டு படிவம் 10ல் பூர்த்தி செய்து உள்ளூர் திட்டக்குழு தீர்மானத்திற்கும் நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகத்திற்கும் அனுப்பப்பட்டது. வரைவு விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.1 க்கு நகர் ஊரமைப்பு இயக்குநரின் இணக்கம் பெற இயலாது. எனவே அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தின் நில பயன்பாட்டிற்கு மாறுதல் ஆணை எடுப்பதில் இருந்து நிறுத்தி வைக்க உள்ளூர் திட்டக் குழு தீர்மான எண்.9 நாள் 30–12–94 ன்படி தீர்மானிக்கப்பட்டுள்ளது. முழுமைத்திட்டம் மறு ஆய்வு செய்யப்படவுள்ளதால் இத்திட்டம் நிலுவையில் உள்ளது.

**<u>கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம்</u>**

25–6–92 ம் தேதிய வீட்டு வசதி மற்றும் நகர் வளர்ச்சித் துறையினரின் 390 ம் எண் அரசாணையில் விருதுநகர் உள்ளூர் திட்டக்குழுமப் பகுதியுடன் கீழ்க்கண்ட பகுதிகளை சேர்த்து கூட்டு உள்ளூர் திட்டக் குழுவாக அறிவித்துள்ளது.

1) விருதுநகர் டவுன் சர்வே வார்டு எண்.1 முதல் 20
2) சின்னமூப்பன்பட்டி
3) 37 கோட்டைப்பட்டி
4) 36 விருதுநகர்
5) 33 ரோசல்பட்டி பகுதி
6) அல்லம்பட்டி பகுதி
7) 34 முத்துராமன்பட்டி பகுதி
8) பேளம்பட்டி
9) கூரைக்குண்டு
10) 84 அழகாபுரி
11) 108 சூலக்கரை
12) செவல்பட்டி

மேற்படி அரசாணை 22–7–92ம் தேதிய தமிழ்நாடு அரசிதழின் பாகம் 11 பிரிவு 2ல் பக்கம் 419 ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பிரசுரத்தை ஒட்டி ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகள் ஏதும் வராததால் 30–11–92 ம் தேதிய 67 ம் எண் உள்ளூர் திட்டக் குழுமம் தீர்மானத்துடன் உறுதி செய்ய வேண்டி அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அரசின் வீட்டு வசதி மற்றும் நகர் வளர்ச்சித் துறையின் 12–11–98 ம் தேதிய 425 ம் ஆணையின்படி விருதுநகர் உள்ளூர் திட்டக் குழுமம் கூட்டு உள்ளூர் குழுமமாக இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. .அதன்பின் 30–11–2001 முதல் விருதுநகர் கூட்டு உள்ளூர் திட்டக் குழுமமாக ஒப்புதல் அளிக்கப்பட்டு மதுரை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலக உதவி இயக்குநர் உறுப்பினர் செயலாராக நியமிக்கப்பட்டு மதுரை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது.

<u>நகராட்சி எல்லையை விரிவுபடுத்துதல்</u>

மன்றத்தின் 25–11–86 ம் தேதிய தீர்மான எண்.731 ல் கீழ்க்கண்ட பகுதிகளை நகராட்சி எல்லையோடு இணைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| கிராம எண் | கிராமத்தின் பெயர் | பரப்பளவு | |
|---|---|---|---|
| | | ஏக்கர் | சென்ட் |
| 38 | விருதுநகர் | 210 | 83 |
| 37 | கோட்டைப்பட்டி | 174 | 66 |
| 33 | கூரைக்குண்டு | 1312 | 50 |
| | மொத்தம் | 1697 | 99 |

நகரின் மேற்குப் பகுதி புறவழிச்சாலைக்கு கீழ்ப்புறம் உள்ள நிலங்களை நகராட்சியோடு இணைப்பதற்கு மேற்படி தீர்மானத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்நகர் விருதுநகர் மாவட்டத்தின் தலைநகராக இருப்பதால் எதிர் காலத்தில் பல தொழிற்சாலைகள் அமைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளது. தற்போது தீர்மானத்தின்படி நகரின் தெற்கு பகுதியில் மட்டும் தொழிற்பகுதி அமைப்பதற்கு இடமுள்ளது. புறவழிச்சாலை மேற்கு தொழிற்சாலைப்பகுதியாக அறிவித்தால் நகரின் மேற்குப்புறத்தில் பல தொழிற்சாலைகள் அமைக்கும் வாய்ப்பு கிடைக்கும்.

எல்லை விஸ்தரிப்பு செயற்குறிப்பு விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தனது 11–8–89 ம் தேதிய ந.க.எண்.493/89–1 மற்றும் ந.க.எண்.2493/89–2 நாள் 20–4–90 எண் கடிதங்களில் பரிந்துரை செய்து அரசுக்கு அனுப்பி உள்ளார். அரசு தனது 5–4–1990 ம் தேதியில் விருதுநகர் மாவட்ட ஆட்சியாளருக்கு எழுதிய கடிதத்தில் அரசு கடித எண்.47008/ந.நே./89–1 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை நாள் 5–4–1990, 1991 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு முடியும் வரை அதாவது 30–6–1991 வரை மேற்படி பிரேரணைகள் அரசுக்கு சமர்ப்பிப்பதை நிறுத்தி வைக்கும்படி பணிந்துள்ளது.

புதிய பேருந்து நிலையமானது நகராட்சி எல்லைக்கு வெளியே கோட்டைப்பட்டி கிராமம் புல எண்.559/4ல் அமைந்துள்ளது. மேற்படி பேருந்து நிலையத்தினை ஒட்டி வடக்கே நகராட்சியுடன் சேர்ப்பதற்கு தீர்மானித்து அரசுக்கு கடிதம் எழுதி மாவட்ட

ஆட்சியாளர் மூலம் 16–7–93 ம் தேதிய ந.க.எண்.ஆர்.6/6927/93 ல் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலம் அனுப்பப்பட்டு அரசின் உத்திரவு எதிர்பார்க்கப்படுகிறது.

**நகரளவுப்பணி**

ஒரு நகரளவர் தொடர்ந்து அறிக்கையாண்டில் பணிபுரிந்து வருகிறார். அறிக்கையாண்டில் ஆக்கிரமிப்புகள் கண்டுபிடிக்கப்படவில்லை. நகரளவரால் கண்டுபிடிக்கப்படும். ஆக்கிரமிப்புகளை நகரமைப்பு அலுவலர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டு கீழ்க்கண்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| | | 2018–2019 |
|---|---|---|
| 1 | வருட ஆரம்பத்தில் நிலுவையில் உள்ள ஆக்கிரமிப்புகள் | 2270 |
| 2 | இந்த ஆண்டு புதிதாக கண்டுபிடிக்கப்பட்டவை | 0 |
| 3 | இந்த ஆண்டு இறுதியில் உள்ளவை | 2270 |
| 4 | இந்த ஆண்டு முடிக்கப்பட்டவை | –– |
| 5 | உரிமையாணை வழங்கப்பட்ட ஆக்கிரமிப்புகள் | இல்லை |
| 6 | அகற்றப்பட்ட ஆக்கிரமிப்புகள் | இல்லை |
| 7 | காலி செய்யப்பட்ட ஆக்கிரமிப்புகள் | இல்லை |
| 8 | குத்தகைக்கு விடப்பட்ட ஆக்கிரமிப்புகள் | இல்லை |

**நகரமைப்பு பணி**

2018–2019 ஆம் ஆண்டில் நகரமைப்பு பிரிவில் திரு எம்.தயாநிதி, நகரமைப்பு அலுவலராக 18.07.2018 வரை பணிபுரிந்து வருகிறார். பின்னர் திரு.அ.ரமேஷ் 19.07.2018 முதல் தற்போது வரை பணிபுரிந்து வருகிறார். 1–4–2015 முதல் 31–3–2016 வரை கீழ்க்காணும் விவரப்படி நகரமைப்பு ஆய்வாளர்கள் பணிபுரிந்து வந்தனர்.

1) திருமதி கே.காளீஸ்வரி
2) திருமதி எஸ்.ரூபா
3) திருமதி பி.செல்வலட்சுமி

மேற்படி வருடம் 121 கட்டிட மனுக்கள் வரப்பெற்றுள்ளன. 91 கட்டிட மனுக்களும் 31–3–2019 க்குள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

## பொது வருவாய்

**இந்த ஆண்டு சொத்துவரி சட்ட விதிகளின்படி ஆண்டு வாடகை மதிப்பின் அடிப்படையில் கீழ்க்கண்ட வீதத்தில் உள்ளது.**

(ஆண்டு வாடகை மதிப்பில்)

| | | |
|---|---|---|
| 1 | பொது விவரங்களுக்கு | 15 ½ சதவீதம் (அரையண்டிற்கு) |
| 2 | தண்ணீர் வடிகால் வரி | சதவீதம் |

| | | |
|---|---|---|
| 3 | கல்வி வரி | 2½ சதவீதம் |
| 4 | நூலக வரி | 1 0சதவீதம் |
| | மொத்தம் | 19.5½ சதவீதம் |

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டங்கள் 81 விதிகளின் கீழ் 14–12–1940 ம் தேதிய உள்ளாட்சித்துறை ஆணை எண்.273 ன்படி நிர்ணயிக்கப்பட்ட விதிப்படி

| | | |
|---|---|---|
| 1 | பொது விவரத்திற்கு வரிவசூல் மதிப்பீடு | 40.9 சதவீதம் |
| 2 | தண்ணீர் மற்றும் வடிகால் வரி | 38.4 சதவீதம் |
| 3 | கல்விநிதி | 12.8 சதவீதம் |
| 4 | நூலகவரி | 7.9 சதவீதம் |
| | மொத்தம் | 100 சதவீதம் |

**பொது சொத்துவரித் திருத்தம்**

அரசாணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை, சென்னை நாள்.19.07.2018 மற்றும் அரசாணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.07.2018ன் படி, தமிழ்நாடு நகராட்சி சொத்துவரியினை 01.04.2018 முதல் சொத்துவரி சீராய்வு செய்யப்பட்டு முன்பிருந்த சொத்துவரி ஆண்டிற்கு ரூ.471.02 லட்சம் சீராய்விற்கு பின் சொத்துவரி ரூ.814.01 லட்சமாக உயர்ந்துள்ளது.

நூல் நிலைய வரி, சொத்துவரியின் ஒவ்வொரு 1 ரூபாய்க்கு 0.10 பைசா ஆகும். அதாவது பொது

**வரியினங்களில் சொத்துவரி, தொழில்வரி மற்றும் குடிநீர் வரியின் வழக்கினங்களும் வசூல் விபரம்**

வரியினங்களில் கேட்பு .. ரூ. 1606.07லட்சம்
வசூல் .. ரூ. 809.52லட்சம்

நிலுவை .. ரூ. 796.6லட்சம்

**வரியற்ற இனங்களில் வசூல் விபரம்**

வரியற்ற இனங்களின் கேட்பு .. ரூ. 168.5லட்சம்
வசூல் .. ரூ. 142.6 லட்சம்

நிலுவை ரூ. 25.94 லட்சம்

**தொழில்வரி**

அரசாணை எண்.249 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (தேர்தல்) நாள் 28–12–98ன்படி 1–10–2018 முதல் புதிய தொழில்வரி விதிப்புக்கு வழி செய்யும் வகையில் தமிழ்நாடு நகராட்சி சட்டம் 59/58 (இரண்டாம் திருத்தம்) தகுந்த திருத்தங்கள் செய்யப்பட்டன. அதன்படி 1–10–18 முதல் கீழ்க்கண்ட விபரப்படி தொழில்வரி உயர்வு செய்து அதற்கான கேட்பு அறிக்கைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அரசுத் துறைக்கு அனுப்பப்பட்டு தொழில்வரி வசூலிக்கப்பட்டு வருகின்றன.

**01–10–2018 முதல் கீழ்க்கண்டவாறு தொழில்வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.**

| வ.எண் | ஆறு மாத சராசரி மொத்த | அரையாண்டு |
|---|---|---|

| | வருமானம் | தொழில்வரி 01.10.2018 முதல் |
|---|---|---|
| 1 | ரூ.21000/– வரை | –– |
| 2 | ரூ.21001/– முதல் ரூ.30000/– வரை | ரூ. 160 |
| 3 | ரூ.30001/– முதல் 45000/– வரை | ரூ.410 |
| 4 | ரூ.45001/– முதல் ரூ.60000/– வரை | ரூ.800 |
| 5 | ரூ.60001/– முதல் ரூ.75000/– வரை | ரூ.1200 |
| 6 | ரூ.75001 க்கு மேல் | ரூ.1250 |

1. **<u>பொது நிதி கணக்கு</u>**

| | 31–3–2019 ல் இருப்பு ரூ. |
|---|---|
| பொது நிதி வரவுக் கணக்கு | 4428524 |
| நூலக வரி | 1121947 |
| பகிர்மான நிதிக் கணக்கு | 4648892 |
| கருவூல நிதிக் கணக்கு | 1392530 |
| பொது நிதி செலவுக் கணக்கு | 1471544 |
| கருவூல பழைய கணக்கு | 17841 |
| மூலதனக் கணக்கு | 4543747 |
| கருவூல சட்டமன்ற உறுப்பினர் நிதிக் கணக்கு | 2278000 |
| அஞ்சலகக் கணக்கு | 36175 |
| பொதுநிதி வைப்பு நிதி | 7702151 |
| 14 வது நிதிக்குழு | 168731 |
| IHSDP | 2002798 |
| அம்மா உணவகம் | 116204 |

2. **ஆரம்பக் கல்விக் கணக்கு**

| | | 31–3–19ல் இருப்பு ரூ. |
|---|---|---|
| 1. | வரவு செலவுக் கணக்கு | 7339009 |

3. **குடிநீர்க் கணக்கு**

| | | 31–3–19ல் இருப்பு ரூ. |
|---|---|---|
| 1. | வரவு செலவுக் கணக்கு | 2989896 |
| 2. | நிலையான வைப்புத் தொகை | 107470 |
| | UGD 1 | 12536493 |
| | UGD 2 | 1948634 |

**<u>வரிப்பளு பின் வருமாறு</u>**

(சராசரியாக)

| வ.எண் | விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | ஜனத்தொகையில் ஒரு நபருக்கு விதிக்கப்பட்ட | 612 |

| | | |
|---|---|---|
| | எல்லா வரிகள் (சராசரியாக) | |
| 2 | வரி விதிக்க்ப்பட்ட கட்டிடங்கள் எண்ணிக்கை (சராசரியாக) | 30299 |
| 3 | ஒவ்வொரு கட்டிடத்திற்கும் விதிக்கப்பட்ட தீர்வை (சராசரியாக) | 1486 |
| 4 | தொழில்வரி விதிக்கப்பட்டவரின் எண்ணிக்கை | 1711 |
| 5 | ஒரு நபருக்கு விதிக்கப்பட்ட தொழில் வரி (சராசரியாக) | 4688 |
| 6 | தீர்வை விதிக்கப்பட்ட நிலத்தின் அளவு (சராசரியாக) | 648 |
| 7 | ஒவ்வொரு ஹெக்டேருக்கும் விதிக்கப்பட்ட தீர்வை (சராசரியாக) | 695 |

**<u>கேட்பு வசூல் மற்றும் நிலுவை</u>**

வரி இனத்தின் மீது விதிக்கப்பட்ட ஆண்டு தீர்வை கேட்பு ரூ.1606.07 /– லட்சம் வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.809.52 /– லட்சம் அறிக்கையாண்டில் பாக்கி உள்ள தொகை ரூ 796.6 லட்சம் மேலும் 62 சிவில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு கோர்ட் நடவடிக்கையின் கீழ் உள்ளது. வசூலிக்கத்தக்க தொகையில் வசூல் சதவீதம் 50.40% ஆகும்

வருவாய் நிதியில் வரி இல்லாத இனத்தின் மொத்தக் கேட்பு ரூ.168.5 லட்சம் வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.142.6/– பாக்கித் தொகை ரூ.25.94 லட்சம் வசூலிக்கத்தக்க தொகையில் வசூல் சதவீதம் 87% ஆகும்.

**<u>நிதி நிலைமை</u>**

| பொதுநிதி | நிதிநிலைமை (லட்சத்தில்) |
|---|---|
| நடப்பு ஆண்டு வரவு | 161848368 |
| செலவு | 168469303 |
| இறுதி இருப்பு | 6620935 |
| சமச்சீர் அரசு உதவித் தொகை | 70252244 |
| முத்திரைக் கட்டண மிகுவரி | 4016313 |
| கேளிக்கை வரி | 234534 |
| நீதிமன்ற அபராத வசூல் | ––– |
| மொத்தம் | 67882156 |

**<u>மூலதன கணக்கு மானிய வரவுகள்</u>**

| வ.எண் | வருமான விபரம் | வரவுகள் லட்சத்தில் |
|---|---|---|
| 1 | MLA | 2005000 |

| | | |
|---|---|---|
| 2 | MP | 2278000 |
| 3 | SBM | 12946000 |

**செலவினம் 2018–2019 (இலட்சத்தில்)**

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 48.74 |
| மழைநீர் வடிகால்கள் | 4.51 |
| அலுவலக தளவாடங்கள் | 0.68 |
| சிமெண்ட் சாலைகள் | 31.16 |
| தார்சாலைகள் | 50.26 |
| இதர பணிகள் | 83.78 |

**குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் நிதி**

நடப்பு நிதியாண்டு வரவு .. ரூ.111.19 இலட்சம்
செலவு ரூ.91.00 இலட்சம்

**செலவு**

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 0.21 |
| தளவாடங்கள் | 0.18 |
| நீரேற்று நிலைய மின் உபகரணங்கள் (ம) பணிகள் | 52.30 |
| ஆழ்துளை கிணறு மற்று கைபம்புகள் | 36.18 |
| இதர | 20.00 |
| மொத்தம் | 108.87 |

**ஆரம்பக்கல்விநிதி**

நடப்பு நிதியாண்டு வரவு .. ரூ. 7339009
செலவு .. ரூ. 21.12 இலட்சம்

ஆரம்ப கல்வி நிதி

நகராட்சி நிதியிலிருந்து பங்குத் தொகை .. ––

செலவினம்
கட்டிடங்கள் ..

**கடன்**

2018–2019 ஆம் ஆண்டு வரை மொத்த கடன் நிலுவை ரூ. 99130098/– லட்சம் ஆகும். இதில் 2018–2019ம் ஆண்டில் வட்டி மட்டும் செலுத்தப்பட்ட தொகை ரூ.125000000/– லட்சம்

**முதலீடு**

நூற்றாண்டு நிதிக்காக வரப்பெற்ற மானியம் ரூ.8022000/—ம் முதலீடு செய்யப்பட்டது.

**தணிக்கை**

2018—2019 ம் ஆண்டுக்கான தணிக்கை நடைபெற்று வருகிறது.

மாநில நிதிக் கணக்கு அறிக்கையாண்டில் 18 பத்திகள் மட்டும் நிலுவையாக உள்ளது.

**பொது**

நகராட்சி ஆணையருக்கும் இதர பிரிவு அலுவலர்களுக்கும் இடையே உறவுமுறை உள்ளன்புடன் கூடியதாக இருந்தது. பிரிவு அலுவலர்களுக்கும் இதர பணியாளர்களும் இவ்வாண்டில் தந்த ஒத்துழைப்பிற்கு உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்
விருதுநகர் நகராட்சி